ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

27.02.2013 - மலர் 09, இதழ் 52



கணினி கையேடு இணைப்பு

# சேதமடையும் கப்பல்கள் பழுதுபார்க்கப்படும் விதம்...!




ஊடக பாடநெறி

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாமன்னன் பண்டாரவன்னியன்'




அரியாலையூர் சி.சிவதாசன்

# வன்னியின் வரலாறு

திருகோணமலையில் இருந்து ஆட்சி செலுத்தி வந்த குளோக்கோட்ட மன்னன் திறமையான முறையில் ஆட்சி செலுத்துவதை அறிந்த சிங்கள மன்னனான விஜயன் வழிவந்த பாண்டுவசுவின் மனைவி தனது பெரும் படையினை அனுப்பி குளக்கோட்ட மன்னனை விரட்ட முனைந்தாள். குளக்கோட்ட மன்னனை விரட்ட வந்த படையினர் குளக்கோட்ட மன்னனின் ஆட்சித் திறனையும், படை வீரர்களின் போர்த்திறனையும் கண்டு அதிசயித்து திரும்பிச் சென்று பாண்டுவசுவின் மனைவியிடம் நிலைமையையும், குளக்கோட்ட மன்னனின் பெருமையையும் எடுத்துக் கூறினார்கள். இது கேட்ட பாண்டுவசுவின் மனைவி பெரு வியப்படைந்தாள். இவ்வாறு குளக்கோட்ட மன்னனின் பெருமையும் புகழும் நாளுக்கு நாள் வேற்று அரசுகளால் மதிக்கப்பட்டு வந்தது. குளக்கோட்ட மன்னன் மேலும் விவசாயத்தை விருத்தி அடையச் செய்வதற்காக, திருகோணமலையிலிருந்து வடக்கு நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தான். வடக்கே ஆனையிறவு பரவைக் கடலையும், தெற்கே நுவரகலாவெவ என்று முன்னர் அழைக்கப்பட்ட அனுராதபுரத்தையும், கிழக்கே மூல்லைத்தீவையும் அதை அண்டிய கடற்பரப்பையும், மேற்கே மன்னார்க் கடலையும் எல்லைகளாகக் கொண்ட பெரும் நிலப்பரப்பையும் குளக்கோட்ட மன்னன் தனது ஆட்சிக்குட்படுத்தினான்.

இப்பிரதேசத்தை வளப்படுத்தி ஆட்சி செய்ய ஏழு வன்னியர்களை சோழ நாட்டிலிருந்து வரவழைத்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தான். இந்த ஏழு வன்னியர்களும் இலங்கைத் தீவிலிருந்து சோழ நாட்டிற்கு பயணித்த வேளை, அவர்கள் பயணித்த கப்பல் கடலில் மூழ்கியதால் மரணமடைந்தனர். பின்னர் குளக்கோட்ட மன்னன் தனது மகன் சிங்ககேதுவிற்கு பாண்டிநாட்டிலிருந்து மணப்பெண்ணை வரவழைத்த போது, மணப் பெண்ணை அழைத்துவந்த அறுபது வன்னியர்கள் வடக்கே அமைந்த வன்னி நிலப்பரப்பை தமக்குத் தரவேண்டும் என வேண்டினர். மன்னன் குளக்கோட்டன் அதற்குச் சம்மதித்து அந்த வன்னியர்களில் ஒருவனை கண்டி அரசனின் ஆட்சிக்குள் அமைந்த நுவரகலாவிய பிரதேசத்திற்கு அவன் விருப்பத்தைக் கேட்டு அனுப்பிவைத்தான். அவன் அப்பிரதேசத்தின் திசாவையாகக் கண்டி மன்னனால் நியமிக்கப்பட்டான். இப்பிரதேசம் சிங்கள வன்னி அல்லது மகாவன்னி என அழைக்கப்பட்டது. இதுவே இன்றைய அனுராதபுரம் ஆகும். இவ்வன்னியன் தவிர்ந்த ஏனைய ஐம்பத்தொன்பது வன்னியர்களும் மன்னனின் விருப்பினோடு வடக்கே அமைந்த வன்னி நிலப்பரப்பிற்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் பனங்காமத்தை தமது இராசதானியாகவும் கொண்டனர்.

இந்த ஐம்பத்தொன்பது வன்னியர்களுக்கு இடையே தலைமைப் போட்டி காரணமாக ஐம்பத்திமூன்று வன்னியர்கள் மரணமடைந்தார்கள். எஞ்சிய ஆறு பேர்களும் ஆறு பிரிவுகளாக வன்னி மண்ணை ஆட்சிசெலுத்தினார்கள். அவர்கள் தமக்குள் ஒருவனைப் பேரரசனாக ஏற்றுக்கொண்டு குளக்கோட்ட மன்னன் கட்டளைப்படி, குளங்களைத் திருத்தி வயல்களை உருவாக்கி வேளாண்மை செய்தார்கள். வேளாண்மையில் கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதியை திருகோணமலை கோணேசர் ஆலயத்திற்கும் செலுத்தி வந்தார்கள்.



இந்த வன்னியர்கள் யாருக்கும் அஞ்சாமல் பிற்காலத்தில் ஆட்சி செலுத்தி வந்தமையால், இப்பிரதேசம் 'அடங்காப்பற்று' என அழைக்கப்படலாயிற்று. இப்பிரதேசத்தை வன்னியர்கள் ஆட்சிசெய்தபோது, சிவனை வழிபாடு செய்த இராவணன் பரம்பரையினரும், வேடுவ இனத்தினரும், தமிழ் பௌத்தர்களும் வாழ்ந்துள்ளார்கள். மேலும் ஆட்சி செலுத்திய வன்னியர்கள் சோழ, பாண்டிய தேசத்திலிருந்தும் பலரை அழைத்து வந்து குடியேற்றினார்கள். இதுவே வன்னியின் பூர்வீக வரலாறு ஆகும். (தொடரும்)

---

விஜய் Bookvin

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ரூபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.

**இலங்கையும் சீனாவும் இணைந்து, விண்வெளிக்கு அனுப்பிய செய்மதியின் (Supreme-SAT-I) நோக்கம் என்ன?**

**எம்.எச்.எம்.ரிஸ்வி, உடுபில வீதி, மாகோல**

கடந்த வருடம் நொவெம்பர் 27 ஆம் திகதி சீனாவின் Xichang விண்வெளி நிலையத்திலிருந்து, பி.ப 3.43 மணிக்கு 'Supreme SAT-I' எனும் செய்மதி விண் நோக்கி ஏவப்பட்டது. இதன்மூலம் தனக்கென ஒரு செய்மதியைக் கொண்டுள்ள 45 ஆவது நாடாக இலங்கை வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டது. இலங்கைக்கு மேலாக, 87.5° இல் 36,000 km உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இச்செய்மதியின் பிரதான நோக்கம் தகவல் தொடர்பாடலாகும். இணையம், ஒளி/ஒலி பரப்பு (DTH-Direct to Home TV) மற்றும் தொடர்பாடல் துறைகளுக்கு இச்செய்மதி பெரிதும் உதவி புரியும் என்று நம்பப்படுகின்றது. 15 வருட ஆயுள் கொண்ட இச்செய்மதியை இயக்க அல்லது கட்டுப்படுத்த, இலங்கையின் பல்லெகெலவில் ஒரு மையம் (Control Center) அமைக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



* * *

**உலர் காற்றைவிட, ஈரலிப்பான காற்றில் ஒலி வேகமாகப் பயணிப்பதற்கான காரணம் என்ன?**

**எம்.என்.அஸீம், ஹ¬ரீமாலுவ, ரம்புக்கனை**

வளியைவிட நீரிலும், நீரைவிட திண்மத்திலும் ஒலி வேகமாகப் பயணிக்க பிரதான காரணம் அதன் மூலக்கூறுகளுக்கிடைப்பட்ட தூரமாகும். அதாவது, 'செறிவு' ஆகும். இவ்வாறே, காற்றில் ஈரலிப்பு அதிகமாக இருக்கும்போது ஒலி (சத்தம்) பயணிக்கும் வேகம் அதிகமாயிருக்கும். இதற்கு காரணம் மூலக்கூற்று திணிவாகும் - $N_2$ - 28, $O_2$ - 32, $H_2O$-18. மூலக்கூற்று திணிவு, ஈரலிப்பான வளியில் (நீராவி ($H_2O$) அதிகம்) குறைவு என்பதால், ஒலி அலைகள் வேகமாய் கடத்தப்பட உதவுகிறது. அவ்வாறே, வளியின் செறிவு அதிகரிப்பதும் இதற்கு காரணமாக அமைகின்றது. மூலக்கூற்று திணிவு குறைந்த மூலக்கூறுகள் இலகுவாய் அதிர்ந்து ஒலியைக் கடத்துவதும், அருகருகே மூலக்கூறுகள் இருப்பதும் இந்த தோற்றப்பாட்டுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.




**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk


எல்ஸ்வர்த் ஏரி ஆய்வு முகாமின் ஒரு பகுதி

# அண்டார்க்டிக்கா பனித்தகட்டின்கீழ் நுண்ணுயிர்களைத் தேடி ஆய்வு...

மேற்கு அண்டார்க்டிக்கா, பல நூறு மீற்றர் ஆழத்திற்கு பனித்தகட்டினால் மூடப்பட்டிருக்கின்றது. இப்பனித்தகட்டுக்கு அடியில் பல ஏரிகள் மறைந்திருப்பதாக ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை 'பாதாள ஏரிகள்' என அழைக்கப்படுகின்றன. இவற்றில் மிகவும் ஆழத்தில் அமைந்துள்ள ஏரிகளில் ஒன்றுதான் 'எல்ஸ்வர்த் ஏரி' (Lake Ellsworth) ஆகும்.

இந்த ஏரியினை ஆய்வு செய்வதற்காக பிரித்தானியாவின் விஞ்ஞானிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த எல்ஸ்வர்த் ஏரியின் நீரை ஆராய்வதனூடாக, அண்டார்க்டிக்கா பனித்தகட்டின்கீழ் உள்ள, பல மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட நுண்ணுயிர்கள் தொடர்பாக ஆய்வு செய்வதே இவர்களின் நோக்கமாகும்.


மேற்கு அண்டார்டிக்கா பனித்தகட்டின் அடியில் 3 கி.மீற்றர் ஆழத்திலேயே இந்த எல்ஸ்வர்த் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியை ஆராய்ச்சி செய்வதற்காக, பனித்தகட்டின் மீது வெந்நீர் பீய்ச்சி அடிக்கவும் துளைகருவியின்மூலம் பனித்தகட்டினை துளையிடவும் திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறு துளையிட்டதன் பின்னர், எல்ஸ்வர்த் ஏரியிலிருந்து நீர் மாதிரியை எடுத்து வந்து ஆய்வுக்குட் படுத்துவதனூடாக, அங்கு மறைந்து வாழும் நுண்ணுயிர்கள் பற்றி அறிந்துகொள் வதே விஞ்ஞானிகளின் நோக்கமாகும்.

கடந்த பல தசாப்தங்களாக, விஞ்ஞானிகள் அண்டார்க்டிக்காவில் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த ஆய்வுகளினூடாக, மாறும் சூழல் தன்மைகளை எதிர்கொண்டு பரிணாமத்தை அடைய முயற்சித்து, தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் போராடும் பக்றீரியாக்கள் மற்றும் நுண்ணுயிரிகள் குறித்து அறியக்கூடியதாக இருக்கும் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

அத்துடன், இந்த அகழ்வின்போது, விசேடமாகத் தயாரிக்கப்பட்ட டைடேனியம் சிலிண்டரில் எடுத்துவரப்படவும் திட்டமிடப்பட்டிருந்தது. இதனால், இந்த நீரில் வாழும் உயிரிகள் பாதுகாப்பாக இருக்கும் எனக் கருதப்பட்டது.

இதற்கமைய, கடந்த வருடம் (2012) டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி 12 விஞ்ஞானிகளை உள்ளடக்கிய பிரித்தானிய ஆய்வுக்குழுவினர் அண்டார்க்டிக்காவின் பனித்தகட்டினை துளையிடும் பணியை ஆரம்பித்திருந்தனர். எனினும், பனித்தகட்டின்மீது வெந்நீரைப் பீய்ச்சி அடிப்பதற்காக இருந்த வெந்நீர் தயாரிப்பு இயந்திரங்களில் திடீர் கோளாறு ஏற்பட்டதை அடுத்து, அப்பணிகள் இடையில் கைவிடப்பட்டன என விஞ்ஞானிகள் குழுவுக்கு தலைமை வகித்த பேராசிரியர் மார்ட்டின் சீகர்ட் தெரிவித்துள்ளார். இதனால், இங்கு மீண்டும் ஆய்வுகளைத் தொடர மேலும் சில காலம் எடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எல்ஸ்வர்த் ஏரி ஆய்வுத் திட்டம்





எல்ஸ்வர்த் ஏரி குறித்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் குழு

## வாசகர் முகம்


இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்
எச்.முஹம்மட்,
முள்ளிப்பொத்தானை.

ஆங்கிலம் கற்க வேண்டுமா ? இதோ.....
60 நாட்கள் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்குமென விசேடமாக தயாரிக்கப்பட்ட
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH. COURSE
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய டீ சேட் T.SHIRT ஒன்றும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவது எப்படி பயிற்சி புத்தகம் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.
* 60 நாட்கள் முடிவில் சரளமான ஆங்கில அறிவுடன் அங்கிகாரம் பெற்ற DIPLOMA IN ENGLISH சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.
* வயது கட்டுப்பாடோ.ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. தமிழ் எழுத. வாசிக்க தெரிந்திருந்தால் போதுமானது.
மேலதிக விபரங்களை பெற பெயர். முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SMS செய்யுங்கள்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசு தானம்

ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவரிடம் பணத்திற்குக் குறைவில்லை. நிலபுலன்கள், பசு மாடுகள் ஏராளமாக இருந்தன. ஆனால், அவர் ஒரு கஞ்சர். யாருக்கும் ஒன்றும் கொடுக்க மாட்டார். அவருக்கு வாய்த்த மனைவியும் அவரைப் போலவே குணமுடையவள். ஒரு தடவை அவருடைய பசுக்களில் ஒன்று திடீரென ஏதோ வியாதிக்குள்ளாகியது. அதன் வயிறு வீங்கவே, மூச்சு விடக்கூடத் திணறிக்கொண்டிருந்தது. இதைக்கண்ட அப்பணக்காரர், 'அடடா, இப்பசு இன்னும் கொஞ்ச நேரத்தில் இறந்துவிடுமே. இறந்தபிறகு, இதை ஊருக்கு வெளியே கொண்டுபோய் புதைக்கச் செலவு செய்ய வேண்டுமே' என்று தன் மனைவியிடம் கூறி, ''இதற்கு வழியென்ன?'' என்று கேட்டார்.

அவர் மனைவியும், ''என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. பணம் செலவாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டாள். என்ன செய்வது என்று யோசித்தவாறே, அந்தப் பணக்காரர் தன்னுடைய வீட்டு வாசலில் வந்து உட்கார்ந்தார்.

அப்போது ஓர் ஏழை அவ்வழியே சென்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அப்பணக்காரருக்கு சட்டென ஒரு யோசனை தோன்றியது. அந்தப் பசுவைத் தானம் செய்து கொடுத்துவிட்டால், அவன் உடனே அதை ஓட்டிக்கொண்டு போய்விடுவான். அதன்பிறகு கவலையில்லை என நினைத்தார்.

அந்த ஏழையைக் கூப்பிட்டு ''வெகுநாட்களாக நான் ஒரு வியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். அவ்வியாதி தீர்ந்துவிட்டால், ஒரு பசுவை கஷ்டப்படும் ஒருவனுக்குத் தானம் செய்வதாக வேண்டிக்கொண்டேன். இப்போது நான் குணமடைந்துவிட்டதால், உனக்கு நான் ஒரு பசுவைத் தானம் செய்யலாமென நினைக்கிறேன். நீயும் குடும்பஸ்தன். கஷ்டத்தில் இருக்கிறாய்!'' என்றார்.

அந்த ஏழைக்கும் ஒரே சந்தோஷமாகப் போய்விட்டது. 'இப்படிப்பட்ட மனிதரை ஊரார் கருமி என்கின்றனரே என்ன வேடிக்கை!' என்று நினைத்தான்.



''இன்று அஷ்டமி, நாளை நவமி, நாளை மறுநாள் நல்ல நாள். அன்று எனக்கு நீங்கள் பசுவைத் தானம் செய்யுங்கள்'' என்றான் ஏழை.

''அதெல்லாம் இல்லை. கோ தானத்திற்கு நல்ல வேளை பார்ப்பதா! இப்போதே அதனை ஏற்றுக் கொள்'' என்று அந்த ஏழையை அழைத்துக்கொண்டு வீட்டின் பின்புறமுள்ள தொழுவத்திற்குச் சென்றார் பணக்காரர்.

அவர் நோயுற்ற பசுவைக் காட்டி, ''இந்தப் பசுவைத்தான் உனக்குத் தானம் செய்கிறேன்'' என்று கூறினார். அந்த ஏழைக்கு அவரது தீயஎண்ணம் புரிந்துவிட்டது. ஆயினும், வெளியே அதைக் காட்டிக்கொள்ளாமல், ''எந்தப் பசுவானாலும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றான்.

உடனே, அந்தப் பணக்காரர், ''இந்தப் பசுவை உடனே நீ உனது வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு போ. இனி இதற்குப் பொறுப்பாளி நானல்ல'' என்று கூறினார். ''இதோ, இரண்டே நிமிடத்தில் கொண்டு போய் விடுகிறேன்'' என கூறி அந்த ஏழை வீட்டின் சுற்றுப்புறத்தைப் பார்த்தான்.

அவனுக்கு மிருக வைத்தியம் தெரியும். ஏதோ ஒரு பச்சிலையை ஒரு மூலையில் கண்டு, கை நிறைய அந்த இலைகளைப் பறித்து வந்து அதனை நன்றாகக் கசக்கி, அதனை அப்பசுவின் மூக்கில் பிழிந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அப்பசு பெரிய தும்மலுடன் பெரியளவு மண் உருண்டை ஒன்றை வெளியே கக்கியது. உடனே, அதன் வயிறு வீக்கம் தணிந்து குணமடைந்துவிட்டது. அந்த ஏழை பசுவின் மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக்கொண்டு, அப்பணக்காரிடம், ''ரொம்ப நன்றி... இதோ, பசுவை நான் கொண்டு செல்கிறேன்'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்தான்.

அவன் போனபின்னர் அப்பணக்காரர், தன் மனைவியிடம், ''அடிப்பாவி, எனக்குத்தான் அறிவு இல்லை. நீயாவது மாட்டு வைத்தியரிடம் அழைத்துப்போங்கள் என்று சொல்லக்கூடாதா? மாட்டு வைத்தியருக்குக் கொஞ்சப் பணம் கொடுத்திருந்தால் இப்படிப் பசுவை இழந்திருக்க வேண்டாமே'' என்று கருமியாகிய பணக்காரர் அழுது புலம்பினார்.

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

அந்த மர்மமான குள்ள மனிதன் அவர்களுடன் உரையாடினான். இங்கு கட்டுப்பாட்டுடன் எதையும் நேரத்துக்குச் செய்து முடிக்க வேண்டும்.

"இது நாங்கள் படைத்துள்ள பரீட்சார்த்தமான உலகம். இதன் வெற்றியை வைத்துத்தான் நாங்கள் அடுத்தகட்டத்துக்குள் அடி எடுத்து வைக்கமுடியும். இந்தப் புதிய உலகத்தில் இப்போதைக்கு சிருஷ்டிகர்த்தாக்களும் அவர்களுடைய ஆராய்ச்சிகளுக்கு உதவுகின்ற உங்களைப் போன்ற இளம் சிருஷ்டிகளும் தான் வாழ்கிறார்கள்.....!"

சுதனுக்கும் பிரியனுக்கும் எதுவுமே புரியவில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

" நாங்கள் இங்கே உருவாக்கியிருக்கின்ற கிரகத்தில் வித்தியாசமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

## பூமிக்குள் புதுக்கிரகம்

உயிர்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்கும் ஆக்கபூர்வமான காரியத்துக்காக, எங்களுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்திருக்கின்றோம்'' என்றான் அந்த குள்ள மனிதன். இதைக் கேட்டதும் சுதன் சிரித்துவிட்டான்.

அந்தக் குள்ள நபர் ஆச்சரியமாக அவர்களை ஏறிட்டுப் பார்த்தான்.

"நீங்கள் பூமியில் கிரகத்தைப் படைத்து என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான் சுதன்.

"உனது கேள்வி சரியானதுதான் சிறுவனே..... இன்றைக்கு கம்ப்யூட்டர் இல்லாமல் எதுவுமே செய்ய முடிவதில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், இதற்கான அடித்தளம் இடப்பட்டது 1822 இல்தான். சார்ள்ஸ் பாபேஜ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் 1946 இல் ஜோன் மேர்க்லி என்பவர், மின்னியக்க கம்ப்யூட்டரைக் கண்டுபிடித்தார். அதனைத் தொடர்ந்து 1952ஆம் காலகட்டத்தில் எட்வாக் கம்ப்யூட்டர் என்று தொடர்ந்து கம்ப்யூட்டரின் வளர்ச்சி அபரிமிதமாகியது. இதுவும் அதேபோன்றே வளரும்! வளரவேண்டும்! அப்போது எதுவும் நடக்கலாம்"

"இதெல்லாம் முடியுமா" சுதன் கேட்டான்.

''முடியும். முடியணும். நீங்கள் 'க்ளோனிங்' முறைபற்றி கேள்விப்பட்டிருக்கவில்லையா? அது ஓர் உயிரைப் பிரதி இடுகிற அபூர்வ முறை. மனிதப் பிரதிகளை சிருஷ்டிக்கும் இம்முறையைக் கண்டுபிடித்தவர் ஜே.க்ரெய்க் வென்டர். அமெரிக்காவின் சண்டியாகோ நகரத்தைச் சேர்ந்தவர். உயிர்களின் மூலப்பொருளாகிய 'க்ரோமோசோம்' எனும் கலக்கருவை எவ்வித இயற்கைப் பொருளையும் சேர்க்காமல் தனியே ஆய்வுகூட அமிலங்கள், திரவங்கள் கொண்டு பிரதிமை செய்யலாம் என்பதை நிரூபித்தவர் அவர்"

''இதெல்லாம் வெறும் ஆராய்ச்சிகள் மட்டும்தானே!'' சுதன் கூற அவனை வியப்புடன் ஊடுருவிப்



பார்த்தான் அந்தக் குள்ள மனிதன்.

"புத்தகப் பைகளை எடுத்துக்கொண்டு பாடசாலை செல்வதும் படிக்கிறதும் கிரிக்கெட் விளையாடுவதும் தான் எங்களுடைய வேலை. எங்களால் உங்களுக்கு எப்படி உதவ முடியும்? இந்த ரொபோவெல்லாம் பார்க்க என்னவோ மாதிரியிருக்கு. எங்களை எங்கள் வீட்டுக்குக் கொண்டு போய் விடுங்கள்.... எங்க அம்மா அழுதபடி இருப்பாங்க....இன்னும் இரண்டு நாளில் பரீட்சையும் இருக்கிறது. நோட்ஸ் எல்லாம் ரெடி பண்ணனும். ஒப்படை செய்யணும் எங்களைக் கொண்டுபோய் விடுங்கள்'' என்று சுதன் கெஞ்சும் குரலில் சொன்னதைக் கேட்டதும் இடி இடியெனச் சிரிக்கலானான் அந்தக் குள்ள மனிதன்.

சுதனும் பிரியனும் திடுக்கிட்டுப் போய் குள்ளனைப் பார்த்தார்கள்.

''நாங்கள்! எத்தனையோ ஆயிரம் கிலோமீற்றர் தொலைவிலிருந்த உங்களை இங்கு கூட்டி வந்திருக்கிறோம். இங்கே உங்களை மாதிரி நிறையச் சின்னப் பையன்கள் இருக்கிறார்கள். அநேகமாக எல்லா நாட்டுப் பிரஜைகளும் இருக்கிறார்கள். நீங்களும் அதுபோன்று ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நானே நினைத்தாலும் உங்களை இங்கிருந்து அனுப்ப முடியாது. எங்கள் விஞ்ஞானிகள் குழு இது பற்றி முடிவு எடுக்கவேண்டும். இங்கு எல்லாமே கம்ப்யூட்டர் மயப்படுத்தப்பட்டிருக்கிறது. சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் ரொபோக்களின் பொறுப்பில் இருக்கிறது. இப்போது எங்களுடைய தலைவர் லோப்பர் ஓய்வில் இருக்கிறார். அவர் கடமைக்குத் திரும்பியவுடன் உங்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சிகள் ஆரம்பமாகும். அதுவரையில் நீங்கள் இங்கேதான் இருக்க வேண்டும் புரிந்ததா?''


குள்ள மனிதனின் குரலில் வித்தியாசம் தெரிந்தது.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவின் கொடூரத்தை உலகுக்கு உணர்த்திய இரண்டாம் உலக யுத்தம்

உலகத்தையே ஆட்டிப் படைத்த முதலாம் உலக யுத்தம் நடைபெற்று முடிந்ததன் பின்னர் அதை விஞ்சுமாற்போல் மற்றுமொரு கொடூர யுத்தம் சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரம்பமானது. அதுதான் இரண்டாம் உலக யுத்தம். 1939 முதல் 1945 வரை சுமார் 6 ஆண்டுகளுக்கு இந்த இரண்டாம் உலக யுத்தம் நீடித்தது. இந்த யுத்தத்தின்போது, பயங்கரமான யுத்த உபகரணங்கள் மற்றும் ஆயுதங்கள் பயன் படுத்தப்பட்டன. இதனால், நாடுகள், நகரங்கள், கிராமங்கள் அழிக்கப்பட்டன. கோடிக்கணக்கான மக்கள் மரணத்தைத் தழு வினர். இந்த பேரழிவின் பின்னர் மனிதத்துவத்தின் மகத் துவத்தினை மனிதர்கள் பெரிதும் உணர்ந்துகொண்டனர்.





## உலக யுத்தத்தின் பின்னணி

ஜேர்மனியின் சர்வாதிகாரி யான எடொல்ஃப் ஹிட்ல ரின் அதிகாரத்துவமே இரண்டாம் உலக யுத்தத் திற்கு வழிவகுத்தது. ஹிட்லர் நாசிசவாதத்தை வெளிப் படுத்தி மிகக் கொடூரமான ஆட்சியை முன்னெடுத்துச் சென்றார். அதனூடாக, ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை அடிமைப்படுத்த வும் முயற்சித்தார். இவ்வாறே, இத்தாலியின் ஆட்சியாளரான பெனிட்டோ முசோலினி, பாசிசவாதத் தினை பின்பற்றி ஹிட்லரைப் போன்று கொடுங்கோல் ஆட்சியை நடத்தினார். இதற்கிடையில், மறுபக்கத் தில் ஆசியாவில் ஏகாதிபத்தி யத்தைக் கட்டியெழுப்பி நாடுகளைக் கைப்பற்ற ஜப்பான் முயன்றது. இவை யனைத்தும் இரண்டாவது உலக யுத்தத்திற்கு காரண மாகின. இதன்போது, செய லாற்றிய சர்வதேச சங்கம், உலக அமைதியை நிலை நாட்டத் தவறியது. இது, இரண்டாவது உலக யுத் தத்தைத் தடுக்க முடி யாமல் போனமைக்கு மற்றுமொரு காரணமாக அமைந்தது. ஹிட்லர் 1939 செப்டெம்பர் முதலாம் திகதி போலந்து நாட்டை ஆக்கிரமித்ததை அடுத்தே, இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமானது. போலந்து நாட்டிற்கு உதவ நேச நாட்டு அணிகள் முன்வந்தபோது, ஜேர்மனி அந்நாடுகளைக் கடுமையாகத் தாக்கியது. இதனால், யுத்தம் மேலும் தீவிரமடைந்தது.

## இரண்டாவது உலகப் போரில் பங்கு கொண்ட நாடுகள்

* நேச நாட்டு அணி (பிரதானமானவை) - பிரித்தா னியா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, போலந்து, சீனா.
* எதிர் அணி-ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா.

1940 இல் ஜேர்மனி பிரான்ஸி னுள் அத்துமீறிப் பிரவேசித்து, பிரான்ஸைக் கைப்பற்றியது. இதனால் ஆத்திரமடைந்த பிரித்தா னியா, அமெரிக்காவுடன் இணைந்து ஜேர்மனியின் முயற் சியை முறியடிக்க முயற்சித்தது. இதனால், பிரித்தானியா மற்றும் ஜேர்மனிக்கு இடையில் கடும் சமர் மூண்டது. தரை, வான், கடல் வழி தாக்குதல்கள் தொடர்ச்சி யாக இடம்பெற்றன. இந்த யுத்தத்தில் பிடிபட்ட பணயக் கைதிகளை ஹிட்லர் மனிதாபிமான மற்ற முறையில் கொடுமை செய்த தாகவும் தகவல்கள் வெளியாகின.

இதற்கிடையில், ஜேர்மனி ரஷ்யாவை ஆக்கிரமிக்க முயற்சித்த போது, அங்கு ஜேர்மன் படையி னர் பெரும் சிக்கல்களை எதிர் கொண்டனர். ரஷ்யா ஒருபுறமும் பிரித்தானியா மறுபுறமும் ஜேர்மனி மீது மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்தின. 1945 இல் நேச அணிகள் ஜேர்மனியின் பேர்ளின் நகரினை நெருங்கியது. இதனை அடுத்து தோல் வியை எதிர்கொள்ளத் தயங்கிய ஹிட்லரும் அவரது ஆதரவாளர்களும் தற்கொலை செய்து கொண்டனர்.

## ஜப்பானின் ஆக்கிரமிப்பு

இந்நிலையில் ஆசியா வின் அதிகாரம் மிக்க நாடாக முன்னேற முயற் சித்த ஜப்பான், நேசநாட்டு அணிகளுடன் மோதியது. இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் 'ஹவாய்' தீவிலுள்ள 'பேர்ள்' துறைமுகத்தின்மீது 1941 நவம்பர் 7 ஆம் திகதி ஜப்பான் தனது போர் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசியது. இதனால், ஜப்பானுக்கு எதிரான தாக்குதலை அமெரிக்கா ஆரம்பித் தது.

தொடர்ந்து ஆசியா வின் நாடுகள் சிலவற் றைக் கைப்பற்றிய ஜப்பான், இலங்கை மீதும் தாக்குதல் நடத்தியது. 1945 ஏப்ரல் 5 ஆம் திகதி கொழும்பின் மீதும் ஏப்ரல் 7 ஆம் திகதி திருகோணமலை மீதும் ஜப்பான் குண் டுத் தாக்குதல்களை நடத்தியது.

இதனையடுத்து, பிரித்தானிய படையினர் இலங்கையைப் பாதுகாக்க முன்வந்தனர். ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளைக் கைவிடுமாறு நேச அணிகள் விடுத்த வேண்டுகோளை ஜப்பான் புறக்கணித்தமையி னால், ஜப்பான் மீது இறுதித் தாக் குதல் நடத்தத் திட்டமிடப்பட்டது.

அதன்படி, 1945 ஒகஸ்ட் 6ஆம் திகதி ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் மீதும் ஒகஸ்ட் 9 ஆம் திகதி நாகசாகி நகரம் மீதும் அணு குண்டுகள் வீசப்பட்டன. இதனை அடுத்து ஜப்பானின் ஹிரோஹித்தோ ஏகாதிபத்தியம் இத்தாக்குதல்களைக் கண்டு பின்வாங்கியதை அடுத்து, இரண்டாம் உலக யுத்தம் முடி வுக்கு வந்தது. இந்த யுத்தத்தில் ஒருகோடி 75 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட் டனர். நாடுகள், நகரங்கள் பேரழிவினை சந்தித்தன. இவ்வாறான மனிதாபிமானமற்ற மிக்க குரூரமான யுத்தமொன்று மீண்டும் ஒரு முறை ஏற்படக்கூடாது என்பதே உலகவாழ் மக்களின் பிரார்த்தனையாக உள்ளது.

**அஷ்வீதா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடையும் கப்
# பழுதுபார்ப்பது இப்

**கடலில் சஞ்சரிக்கும் கப்பல்களில் ஏதேனும் கோளாறுகள் அல்லது பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் செய்ய வேண்டி ஏற்பட்டால், அவை எங்கு கொண்டுசெல்லப்படுகின்றன?, எவ்வாறு பழுதுபாக்கப்படுகின்றன என்பது பற்றித் தெரியுமா? இவை பற்றி ஆராயும்போதுதான் இலங்கையில் இருக்கும் இவ்வாறானதோர் இடத்தைப் பற்றி அறியக்கிடைத்தது. கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள 'கொழும்பு கப்பல்கூடம்' அல்லது 'கொழும்பு கப்பல் பழுதுபார்ப்புக்கூடம்' என்று இதனைக் குறிப்பிடலாம்.**



## கொழும்பு கப்பல்கூடம் பற்றிய தகவல்கள்

### கொழும்பு கப்பல்கூடம்

பண்டையகாலம் முதல் உலகின் பல பாகங்களில் இருந்தும் பலதரப்பட்ட கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளன. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கையின் கொழும்புத் துறைமுகம் அமைந்துள்ளமையால், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் இங்கு தரித்துச் சென்றன. இதன்போது கொழும்புத் துறைமுகத்திற்கு வந்த கப்பல்களில் ஏற்படும் இயந்திரக் கோளாறுகளையும் இதர தொழில்நுட்பக் கோளாறுகளையும் சரிப்படுத்த ஓர் இடத்தின் தேவை உணரப்பட்டது. இதன் விளைவாக, 1938 இல் எமது நாட்டை ஆண்ட பிரித்தானிய ஆளுநரான 'கெல்கொட்' என்பவரால் கொழும்புத் துறைமுகத்திற்கு அருகாமையில் கப்பல்களைப் பழுது பார்க்கும் பணிக்கென பழுதுபார்ப்புக்கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இந்த கப்பல் பழுதுபார்ப்புக்கூடத்தில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக இரண்டு கூடங்கள் இருந்தன. இல. 1, இல. 2 என்று அவை பெயரிடப்பட்டன.

கொழும்பு கப்பல் பழுதுபார்ப்புக்கூடம் நிர்மாணிக்கப்பட்ட காலத்தில் உலகம் முழுவதும் உலகப் போர் ஆரம்பித்திருந்தது. அப்போது பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக இருந்த இலங்கையிலும் உலகப் போரின் தாக்கங்கள் பிரதிபலித்தன. பிரித்தானியாவுக்கு சொந்தமான கப்பல்களையும் நீர்மூழ்கிகளையும் திருத்துவதற்கு இக்கூடத்தினைப் பயன்படுத்த பிரித்தானியர்கள் தீர்மானித்ததோடு, இதற்காக மற்றொரு கூடமும் நிர்மாணிக்கப்பட்டது. இல. 3 என்ற பெயரில் இக்கூடம் நிர்மாணிக்கப்பட்டது.

### கப்பலின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் எப்படி நிகழ்கின்றன?

கப்பல் ஒன்றைப் பழுதுபார்க்க வேண்டி இருப்பின், முதலில் குறித்த கப்பலானது, பழுதுபார்ப்புக்கூடத்திற்குள் எடுக்கப்படுகின்றது. இக்கூடத்திற்குள் கப்பலொன்றின் திருத்த வேலைகளுக்கான அனைத்து விதமான இயந்திரப் பொறிமுறைகளும் உள்ளன. அதன்படி, கப்பல் பழுதுபார்ப்புக்கூடங்கள் இருவகைப்படும். அவையாவன;

1. மிதக்கும் கூடம் (Floating Dock)
2. உலர்வான கூடம் (Dry Dock)

### மிதக்கும் கூடம்

ஏதேனுமொரு கப்பலில் திருத்த வேலைகள் செய்ய வேண்டி இருப்பின், இந்த மிதக்கும் கூடமானது, கடலுக்குள் மூழ்கச் செய்யப்பட்டு அக்கூடத்தின்மீது பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டிய கப்பல் ஏற்றப்பட்டு, பின்னர் குறித்த கூடம் மேலே உயர்த்தப்படும். அப்பொழுது பழுதுபார்க்கவேண்டிய கப்பல் அந்த மிதக்கும் கூடத்தின்மீது தரித்து நிற்கும். துறைமுகத்தின் அருகாமையில் மட்டுமன்றி ஆழ்கடலின் மத்தியிலும் கப்பல்களை பழுதுபார்க்கவேண்டிய தேவை ஏற்படின் இந்த மிதக்கும் கூடமே பயன்படுத்தப்படு கின்றது.

### உலர்வான கூடம்

உலர்வான கூடம் என்பது தண்ணீர் அற்ற மாபெரும் பழுதுபார்ப்புக்கூடமாகும். இக்கூடத்தினுள் நீரை நிரப்பிய பின்னரே கப்பல் உள்வாங்கப்படுகின்றது. அதன் பின்னர் கூடத்திலிருந்து நீர் அகற்றப்படுகின்றது. கொழும்பு துறைமுகத்திலுள்ள கூடங்கள் அனைத்தும் உலர்வான கூடங்களாகும். இக்கூடத்தினுள் வைத்து எவ்வாறு கப்பல் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

### ஆதாரம் ஒன்றை வைத்தல்

உலர்வான கூடத்தினுள் நீரை நிரப்புவதற்கு முன்னர் பழுதுபார்க்கப்படவுள்ள கப்பலின் அடிப்பகுதிக்கு ஏற்ற விதத்தில் ஆதாரம் (முட்டு) வடிவமைக்கப்படும். இதனை 'Keel block' என்பர். நீர் நிரம்பிய கூடத்தினுள் கப்பல் வரவழைக்கப்பட்டு இந்த ஆதாரம்மீது தரித்து நிறுத்தப்படும். இந்த ஆதாரம் இரும்பினால் ஆனது. கப்பல் அடிப்பாகத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு இந்த இரும்பு ஆதாரத்தின் மேல்பகுதியில் பலகைப்பட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

### கப்பலின் அடிப்பகுதியின் வடிவத்தினைப் பெற்றுக்கொள்ளல்

சில கப்பல்களின் அடிப்பகுதியானது, தட்டை வடிவம் கொண்டதாக இருக்கும். சில கப்பல்களின் அடிப்பகுதி முக்கோண வடிவமாக இருக்கும். அதற்கமைய, உலர்வான கூடத்தினுள் கப்பல் வரவழைக்கப்பட்ட பின்னர், அதன் அடிப்பகுதியின் வடிவம் பெறப்பட்டு, அதற்கேற்ப, அதனை நிறுத்தி வைத்துப் பழுதுபார்ப்பதற்கான ஆதாரம் வடிவமைக்கப்படும்.

### உலர்வான கூடத்தினுள் கப்பலை அனுப்புதல்

கடலுக்கு அண்மித்ததாக-கடல் மட்டத்தினைவிட தாழ்வான பகுதியிலேயே, இந்த உலர்வான கூடம் அமைக்கப்படுகின்றது. இதனால், இந்த கூடத்தினை நோக்கி கடல்நீர் இலகுவான முறையில் வந்து சேரும். கப்பலைத் திருத்தும் பணிகள் நிறைவடையும் வரை கடல்நீர் கூடத்தினுள் வராமல் இருப்பதற்காக, இக்கூடத்திற்கும் கடலுக்கும் இடையில் பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆக, உலர்வான கூடத்தினுள் கப்பலைக் கொண்டு வருவதற்கு முன்னர் மெதுவாக, படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பல்களை ...படித்தான்...



கடல்நீர் கூடத்திற்குள் நிரப்பப்படும். கடல்நீர் மட்டமும் கூடத்தின் நீர் மட்டமும் சமநிலைக்கு வரும்போது, கடல் நீரையும் கூடத்தையும் பிரிக்கும் பாலம் நீக்கப்படும். அதன்பின் மிகவும் மெதுவாக கப்பல் கூடத்தினுள் நகர்த்தப்படும். இவ்வாறு நகர்த்தப்படும் கப்பலானது, கூடத்தினுள் இருக்கும் இரும்பு ஆதாரம் மீது சரியான முறையில் பொருத்தப்படுவது அவசியமாகும். ஏனெனில் கூடத்தினுள் இருக்கும் நீர் அகற்றப்பட்டபின், கப்பல் ஆதாரத்தின்மீது சரியான முறையில் இருந்தால்தான் பழுதுபார்ப்பு வேலைகளை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

## கப்பல் பழுதுபார்க்கும் பணிகள் ஆரம்பம்

கப்பல் பழுதுபார்ப்புப் பணிகள் இதன்பின்பே ஆரம்பமாகின்றன.

அந்தவகையில், பழுதுபார்ப்புக்கூடத்திற்கு தேவையான அதிக நிறை கொண்ட பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு கூடத்தின் இரு மருங்குகளிலும் இருக்கும் பாரிய கயிறுகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், கூடத்திற்குள் இருக்கின்ற குழாய்களினூடாக, பழுதுபார்ப்பு பணிகளுக்குத் தேவையான நீர், Gas, மின்சாரம் என்பன பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

## பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக....

கொழும்பு கப்பல்கூடத்தில் கப்பல்களைப் பழுதுபார்க்கும் பணிகளுக்கு மேலதிகமாக, புதிய கப்பல்கள் மற்றும் கடற்படகுகளைத் தயாரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில், துறைமுகத்திற்குத் தேவையான டக் படகுகள் (யானை படகுகள்), பயணிகள் போக்குவரத்து படகுகள், கப்பல்கள், கடல் பாதுகாப்பு படகுகள், இலங்கைக் கடற்படைக்குத் தேவையான அதிவேக கடற்படை தாக்குதல் படகுகள், மீன் களஞ்சியப்படுத்தும் கப்பல்கள் என்பன இங்கு தயாரிக்கப்படும் கப்பல் வகைகளில் சிலவாகும்.

**ப்ரியா**





# அன்னை தெரேசா

இளம் பிராயத்தில்...

நோபெல் பரிசு பெற்றவேளை....

சிறு பிள்ளை ஒன்றுடன்...

**1910** ஒகஸ்ட் 27 ஆம் திகதி மெசிடோனியாவின் ஸ்கொப்ஜே நகரில் பிறந்த எக்னஸ் கொன்க்ஸா பொஜக்சியு, தனது 12 வயது முதல் மதம் சார்பான விடயங்கள் தொடர்பிலும் துறவு வாழ்க்கை தொடர்பிலும் அதீத ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். மனிதர்கள் மீது அன்பு, கருணை கொண்ட உயரிய வாழ்வை வாழ்வதே எக்னஸின் குறிக்கோளாக இருந்தது. தனது 18 ஆவது வயதில் பெற்றோரின் அனுமதியுடன் ஐரிஷ் இன கன்னியாஸ்திரிகளின் 'சிஸ்டர்ஸ் ஒஃப் லொரெட்டோ' என்ற அமைப்பில் எக்னஸ் இணைந்துகொண்டார். அதன்பின்பு டப்ளின் நகரில் சில மாதங்கள் பயிற்சியை மேற்கொண்டார். அந்த பயிற்சியை அடுத்து 1931 மே 24 ஆம் திகதி அவர் இந்தியாவுக்குச் சென்றார். அன்றைய தினம் கன்னியாஸ்திரிகளுக்கான முதன்மை சத்தியப்பிரமாணத்தையும் எக்னஸ் செய்துகொண்டார். அன்றிலிருந்து மதப் பிரசாரகர்களின் காவல் புனிதரான அருட்சகோதரி தெரேசா டி லிசியுஸ்ஸின் பெயரிலிருந்து 'தெரேசா' என்ற பெயரை தேர்ந்தெடுத்து அதனை தனக்கு சூட்டிக்கொண்டார். இவரே பின்னாளில் 'அன்னை தெரேசா' என உலகளவில் அறியப்பட்டவராவார்.

1937 இல் இந்தியாவின் கல்கத்தா நகருக்குச் சென்ற அவர், 1937 இலிருந்து 1948 வரை கல்கத்தாவின் சென்.மேரி உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்றார். பாடசாலை தடுப்புச் சுவரின் வெளியே அவர் கண்ட வறுமையும் வேதனையும் நிரம்பிய மனித வாழ்க்கை முறைகள் பெரும் துன்ப உணர்வை அவருக்குள் ஏற்படுத்தியது. இவ்வாறு துன்பப்படுபவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவ வேண்டும் என்று தெரேசா கருதினார். இதன் விளைவாக 1948 இல் உயர்பள்ளிக் கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலகிய அவர், முதற்கட்டமாக வறிய பிள்ளைகளுக்காக திறந்தவெளி பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து பலரும் சுயமாக முன்வந்து அதற்கான நிதியுதவி உட்பட மேலும் பல உதவிகளை அவருக்குச் செய்தனர்.

1950 ஒக்டோபர் 7 ஆம் திகதி வத்திக்கானின் 'ஹோலி சீ' என்ற கத்தோலிக்க பரிபாலன மதத் தலைமையகம், அன்னை தெரேசாவின் சமூக சேவைகளை ஓர் அமைப்பின்கீழ் செயற்படுத்த அனுமதி வழங்கியது. 'பிறர் அன்பின் பணியாளர் சபை' என்று அந்த அமைப்பு அழைக்கப்பட்டது. 1965 இல் இந்த அமைப்பு சர்வதேச மத நிறுவனமாக மாற்றம் பெற்றது.

இன்று உலகம் முழுவதும் இந்த அமைப்பு பரந்து விரிந்து செயற்பட்டு வருகின்றது. தொற்றுநோய்கள், இயற்கை அனர்த்தங்கள், யுத்தங்கள் போன்றவற்றால் பாதிப்புறும் மக்களுக்கு அந்த அமைப்பு உதவி வருகின்றது. அத்துடன், போதைவஸ்துப் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்கள், ஆதரவற்றோர், எய்ட்ஸ் நோயாளிகள் ஆகியோருக்கென வதிவிட சிகிச்சை முகாம்களையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

அன்னை தெரேசாவினால் ஆரம்பிக்கப்பட்ட தன்னலம் பாராத இதுபோன்ற சேவைகளுக்காக,அவருக்கு பல விருதுகளும் கிடைத்தன. இவ்விருதுகளில் பதின்மூன்றாவது ஜோன் பாப்பாண்டவரின் சமாதான விருது (1971), நேரு விருது (1972), பெல்சன் விருது (1979), மெக்சேசே விருது, நொபெல் விருது (1979) என்பனவும் அடங்கும். பிற்காலத்தில் இருதய நோயினால் அடிக்கடி பாதிப்புற்ற இவர், மலேரியா போன்ற தொற்றுகள் மற்றும் எதிர்பாராத விபத்துக்கள் காரணமாகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டார். பின்னர் 1997 செப்டெம்பர் 5 ஆம் திகதி இவர் இயற்கை எய்தினார்.

**வசந்தி**



வறிய மக்களுக்கான சேவை

அன்னை தெரேசாவின் இறுதிக் கிரியையின் போது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வினாத்தாள் - II தமிழ் (சென்ற வாரத் தொடர்ச்சி)

பெயர்: ................................................ நேரம்: 1 மணித்தியாலம்

21) பின்வரும் முகங்களில் சோகமான முகபாவனையைக் காட்டும் முகம் எது?

1. 2. 3. 4.



22) சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் எது?

1. 1231 2. 1929 3. 1919 4. 119

23) மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப் பொருத்தமான முதலுதவியாக அமைவது;

1. ஆடைகளை தளர்த்தி காற்றுப்பட விசிறுதல்.
2. தலையை நன்கு கீழ்நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செய்தல்.
3. சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்குக் கொடுத்தலும்.
4. தலை நிமிர்ந்திருக்குமாறு அமரச் செய்து காற்றுப்பட விசிறுதல்.

24) இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் மூன்று பகுதிகள்;

1. தர்மசக்கரம், நெற்கதிர், அரச இலைகள்
2. அரச இலைகள், பூவிதழ்கள், நெற்கதிர்
3. தர்மசக்கரம், நெற்கதிர், வாளேந்திய சிங்கம்
4. நெற்கதிர், சங்கு, தர்மசக்கரம்

25) உடலுக்குத் தேவையான சக்தியை வழங்குவதில் செல்வாக்குச்செலுத்தும் உணவுச் சோடி;

1. வாழைப்பழம், நெத்தலிக் கருவாடு 2. மாஜரின், நெய்
3. கோவா, கரட் 4. தீட்டாத அரிசி, விளாம்பழம்

26) தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?

1. சிவப்பு 2. நீலம் 3. கறுப்பு 4. கபிலம்

27) இலங்கையின் அரச இலச்சினையில் சௌபாக்கியத்தைக் குறிப்பது;

1. நிறைகுடம் 2. நெற்கதிர் 3. தர்மசக்கரம் 4. பூவிதழ்கள்

28) மஞ்சள் சாயத்தையும், நீலச்சாயத்தையும் கலந்து தயாரிக்கப்படும் நிறம் யாது?

1. ஊதா 2. பச்சை 3. சிவப்பு 4. கபிலம்

29) ஒருவர் தமது வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டிய இடம்;

1. கிராம அலுவலரிடம் 2. பிரதேச செயலாளரிடம்
3. சமுர்த்தி அலுவலரிடம் 4. பொலிஸ் நிலைய அலுவலரிடம்


30) நீரினுள் இடும்போது, அமிழும் திரவம் எது?

1. ஒலிவ் எண்ணெய் 2. பெற்றோல் 3. மண்ணெண்ணெய் 4. இரசம்

31) விளக்குத்திரி வழியே விரைவில் மேல் நோக்கிச் செல்லும் திரவம் எது?

1. மரக்கறி எண்ணெய் 2. கடுகு எண்ணெய்
3. பசு நெய் 4. மண்ணெண்ணெய்

32) இரு மின்கலங்கள் (C), ஒரு மின்குமிழ் (B), ஓர் ஆளி (S) ஆகியன வயர்த்துண்டுகள் மூலம் பின்வரும் ஒவ்வொரு விதமாக தொடுக்கப்பட்டுள்ளன. ஆளி (S) ஐ மூடும்போது மின்குமிழ் ஒளிரும் உரு எது?




33) பின்வரும் பொருட்களிடையே, பித்தளைப் பாத்திரங்களைத் துப்பரவாக்கி மினுக்குவதற்கு மிகப் பொருத்தமான பொருள் எது?

1. சுட்ட உமி 2. பழப்புளி 3. தேங்காய்ப்பூ 4. விம்

34) புவியின் உபகோள் எது?

1. வியாழன் 2. சந்திரன் 3. செவ்வாய் 4. சனி

35) ஒரு காந்தத்துண்டின் ஒரு முனையை இன்னொரு காந்தத்துண்டின் ஒரு முனைக்கருகில் கொண்டு செல்லும்போது, முன்னைய காந்தத்துண்டு விலகிச் சென்றது. இதனைக் குறிக்கும் சொல்;

1. விரிவடைதல் 2. கவர்தல் 3. தள்ளுதல் 4. கடத்துதல்

36) ஆரம்பத் தையல் முறையில் கீழே வரும் ஒரு தையல் முறை;


1. நரம்புத்தையல் 2. சோம் தையல்
3. மீன்முள்ளுத் தையல் 4. கம்பளித் தையல்

37) காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண் யாது?

[7] [0] [6] [8] ..........................................

38) எண் 9082 இல் இலக்கம் 8 இனால் குறிக்கப்படும் பெறுமானம் யாது? ....................

39) உருவில் ஒரு சதுரமுகி காணப்படுகிறது. அதன்



1. முகங்களின் எண்ணிக்கை யாது? ..............................
2. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................

40) 9740 உடன் 763 ஐக் கூட்டும்போது, கூட்டுத்தொகை யாது? ..............................

41) 8063 இலிருந்து 678 ஐக் கழிக்க வித்தியாசம் யாது? ..............................

42) 36147 ஐ எண் பெயரில் எழுதினால்; ..............................

43) 16 இவ்வெண்ணை உரோமன் எண்ணில் எழுதுக. ..............................


44) 515 தோடம்பழங்கள் ஐந்து பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது? ..............................

45) ரூபாய் 30.00 விலையுள்ள ஒரு அடிமட்டத்தையும் ரூபாய் 26.50 விலையுள்ள ஒரு வர்ணப் பெட்டியையும் வாங்கி நூறு ரூபாய்த் தாள் ஒன்றினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப்பணம் யாது? ..............................

46) ஒரு பாத்திரத்தினுள் 6l 600ml வண்ணப்பூச்சு இருந்தது. அதில் 2l 800ml அளவு சுவரில் பூசப்பட்டது. எஞ்சியுள்ள வண்ணப்பூச்சின் அளவு யாது? ..............................

47) 8m 45cm நீளமான கம்பித்துண்டிலிருந்து 3m 75cm கம்பித்துண்டு வெட்டி நீக்கப்பட்ட பின்னர் எஞ்சிய கம்பித்துண்டின் நீளம் யாது? ..............................

48) ஒரு குழுவில் உள்ள மாணவர்களிடமிருந்து அவர்கள் மிகவும் விரும்பும் உணவு வகைகள் பற்றி கேட்கப்பட்டு அத்தகவல் குறிக்கப்பட்டுள்ளது.




1. பாணை விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்? ..............................
2. தோசையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க, எத்தனை மாணவர்கள் கடலையை கூடுதலாக விரும்புகின்றனர்? ....................
3. தோசையை விரும்பும் மாணவர்களைப் போல், இரு மடங்கு மாணவர்கள் இடியப்பத்தை விரும்புகின்றனர். அதனை வரைபில் உரிய நிரலில் குறித்து நிழற்றுக.
4. இந்த ஐந்து வகை உணவுகளையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

49) பாடசாலையின் காலைக் கூட்டத்தில் அதிபர் பின்வருமாறு கூறினார்.

"ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் கஜன் பேச்சுப் போட்டியில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். இப்போது நான் அந்த மாணவனை முன்னால் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்"

நீர்தான் கஜன் எனின், இச்சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம்பெறல் வேண்டும். இவ்வாக்கியங்களில் எழுவாய்-பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

1. ..............................................................................
..............................................................................
2. ..............................................................................
..............................................................................
3. ..............................................................................
..............................................................................
4. ..............................................................................
..............................................................................
5. ..............................................................................
..............................................................................
6. ..............................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய ரஷ்யாவில் விழுந்த எரிகல்










ரஷ்யாவின் மத்திய யூரல் பகுதியை கடந்த 15 ஆம் திகதி காலை எரிகல் ஒன்று தாக்கியது பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இந்த எரிகல் 'ச்செல்யாபின்ஸ்க்' பகுதிக்கு அண்மையிலேயே விழுந்துள்ளது. இதனால் அங்கு பயங்கரமான அதிர்வலைகள் ஏற்பட்டன, இதன் காரணமாக, அந்தப் பகுதியில் இருந்த கட்டடங்கள் சேதமடைந்ததோடு, சுமார் 950 பேரளவில் காயமடைந்தும் உள்ளனர்.





இந்த எரிகல் வெடித்துச் சிதறிய போது, பிரகாசமான ஒளியுடன்கூடிய பாரிய வெடிச்சத்தம் கேட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். அத்துடன், வெடிப்பினால் ஏற்பட்ட அதிர்வின்மூலம் கட்டடங்கள் சேதமடைந்து, அவற்றின் கண்ணாடிகள் வெடித்துச் சிதறியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனாலேயே, பலர் காயமடையவும் நேர்ந்துள்ளது.

**மேலும் எரிகல், விண்கற்கள் தாக்குமோ என்ற அச்சத்தில் மக்கள்**

இந்த எரிகல் வினாடிக்கு 30 கி.மீற்றர் வேகத்தில் வீழ்ந்துள்ளதாக ரொஸ்கொஸ்மொஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதனால், ச்செல்யாபின்ஸ்க் நகரிலேயே பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.தலைநகர் மொஸ்கோவில் இருந்து 1500 கி.மீற்றர் கிழக்கே ச்செல்யாபின்ஸ்க் நகரம் உள்ளது. இங்கு பல தொழிற்சாலைகள், அணு மின் நிலையம், மற்றும் அணுக் கழிவு சேமிப்பு நிலையம் போன்றவை அமைந்துள்ளன.




எவ்வாறாயினும், இந்த எரிகல் தாக்கத்தினால் அங்குள்ள அணு மின் நிலையங்களுக்கு எவ்வித தாக்கங்களும் ஏற்பட வில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எரிகல்லானது, ச்செல்யாபின்ஸ்க் பிராந்தியத்திற்கு சற்று அப்பால் ச்செபார்குல் என்ற இடத்தில் உள்ள ஏரி ஒன்றில் வீழ்ந்துள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன், இதுபோன்று மேலும் விண்கற்கள், எரிகற்கள் தாக்குமோ என்ற அச்சமும் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான எரிகற்கள் பூமியில் வீழ்வது மிக அபூர்வமான நிகழ்வாகும். 1908 ஆம் ஆண்டில் சைபீரியாவில் இவ்வாறான எரிகல் வீழ்ந்ததில் 2,000 சதுர கி.மீற்றர் பரப்பளவு நிலம் சேதமுற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

# 2012 DA14 விண்கல் பூமியை அண்மித்துச் சென்றது

**2012 DA14 என்ற விண்கல் (asteroid), கடந்த 15 ஆம் திகதி இரவு பூமியிலிருந்து சுமார் 27,700 கி.மீற்றர் தூரத்தில் பூமியைக் கடந்து சென்றது.**

சூரியனை கோள்கள் சுற்றிவருவது போன்றே, 'Asteroids' என அழைக்கப்படும் விண்கற்களும் (சிறுகோள்) சுற்றிவருகின்றன. இவை, கோள்களைவிட அளவில் சிறியவை. இவ்வாறு லட்சக்கணக்கிலான விண்கற்கள் விண்வெளியில் உலா வருகின்றன, அவற்றில் பல வகைககளும் உள்ளன. இவற்றில் பூமிக்கு அருகில், சூரியனை சுற்றிவரும் விண்கல் வகையை சார்ந்ததுதான் இந்த '2012DA14' விண்கல். இது சுமார் 150 அடி அதாவது 50 மீற்றர் விட்டம் கொண்டது.




## விண்கல் கண்டுபிடிப்பு

கடந்த வருடம் (2012) பெப்ரவரி மாத இறுதிப் பகுதி யில், ஸ்பெயின் வானியலாளர்கள் இருவராலேயே இந்த விண்கல் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் சுற்றுப்பாதையானது, புவிச்சுற்றுப்பாதைக்கு, நிகராக அமைந்துள்ளதனை அப்போது அவர்கள் அவதானித்துள்ளனர். எனவே, இவ்வருடம் (2013) பெப்ரவரியில் இந்த விண்கல்லானது, புவியுடன் மோதுவதற்குப் பெரிதும் வாய்ப்புள்ளதாக அவர்கள் ஏற்கனவே கூறியிருந்தனர். எனினும், 'பேட் எஸ்ட்ரோனொமி ப்லொக்' (Bad Astrnonomy Blog) ஸ்தாபகரான அமெரிக்க வானியலாளர் ஃபில் ப்ளேட், இந்த விண்கல் தொடர்பில் தேவையற்ற அச்சம்கொள்ளத் தேவையில்லை என அப்போது குறிப்பிட்டிருந்தார்.




எவ்வாறாயினும், இந்த விண்கல் கடந்த 15 ஆம் திகதி பூமிக்கு மிக அருகில் வரலாம் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். இந்நிலையிலேயே, கடந்த 15 ஆம் திகதி '2012DA14' விண்கல் பூமிக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது கடந்து சென்றது. இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, கிழக்கு ஐரோப்பா போன்ற நாடுகளில் உள்ளவர்கள் இதனை தொலைநோக்கி மூலம் பார்த்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்து சமுத்திரத்தின் சுமாத்ரா தீவுக்கு அருகில் இந்த விண்கல் கடந்து சென்றபோது, சாதாரண கண்களுக்கு, அது மிக சிறிதாகத் தெரிந்துள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Asteroid's close encounter with Earth
15 February 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தளிர்கரம்

வழங்குபவர்: ஆசிரியை ரோஸ்மலர்

காட்டப்பட்டுள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள படத்தை முழுமைப்படுத்துங்கள்.






5 வண்ணத்துப்பூச்சிகளில் இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் மாத்திரம் வித்தியாசமாக உள்ளன. அவை எவை என்பதைக் கண்டறிந்து வட்டமிடுக.

உயரமாக இருப்பவரை இனங்காண்க.

இவ்வுருக்களுக்கு ஐந்து வித்தியாசமான நிறங்களைத் தீட்டி, ஒரே மாதிரியான உருக்களுடன் இணைக்க.




# மின்னியல் தொடர்பாடல்

செய்தி தொடர்பில் அச்சுக்கலை அறிமுகமும் அச்சு ஊடக விரிவாக்கங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட தொடர்பியல் நிலைப்





பட்ட ஆராய்வுகள் மின்னியல் சாதன தொடர்பாடல் முறைகளை அறிமுகப்படுத்தலாயின. அந்தவகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் சாமுவேல் மோர்ஸ் என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டதே 'தந்தி' முறை தொடர்பாடலாகும். தொலைத்தொடர்புத் துறையின் புரட்சியாக இத்தொடர்பாடல் முறைமை அமைந்திருந்தது.

ஆரம்பத்தில் கம்பி வழித் தந்தி முறை காணப்பட்டது. பின்னர் அது கம்பியில்லாத் தந்தி முறையாக மாற்றம் பெற்றுள்ளது. தொடர்பு ஊடாக செய்திகளை வரிவடிவில் பரிமாறிக்கொள்ள இது உதவியது.

இவ்வாறே, உலகின் எந்தவொரு மூலையில் உள்ளவர்களுடனும் பேசுகின்ற வாய்ப்பை தொலைபேசி தொடர்பாடல் முறை வழங்கியது. அலெக்சாண்டர் கிரஹம்பெல் என்பவரால் அறிமுகம் செய்யப்பட்ட தொலைபேசி, ஆரம்பத்தில் கம்பி இணைப்பின்மூலமே பயன்பாட்டில் இருந்தது. பின்னர் கம்பியில்லா இணைப்பு வழியுள்ள தொலைபேசி பயன்பாட்டிற்கு வந்தது.

அந்தவகையில், எண்சார் தொழில்நுட்பத்தில் உருவான சீ.டி.எம்.ஏ.(CDMA) என்ற கம்பியில்லாத் தொலைபேசி அறிமுகம் செய்யப்பட்டது. எண்களைச் சுழற்றி அழைப்பைப் பெற்றுக் கொள்கின்ற முறையில் இருந்து விலகி இலக்கங்களை அழுத்துவதன் ஊடாகத் தொடர்பை

## ஊடக பாடநெறி 22

ஏற்படுத்தும் வசதிகள் உருவாக்கப்பட்டன. தொடர்புத்துறையில் செய்திகளை இரு நபர்களிடையேயும், குழுக்களிடையேயும் வாய்மொழி வழியாக பரிமாற்றுவதற்கு தொலைபேசி பயன்படுத்தப்படுகின்றது.

தொடர்புத்துறையில் கம்பியில்லாத் தொடர்புக்குப் பயன்படும் மின்காந்த அலைகளின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து மார்க்கோணி வானொலியை



அறிமுகம் செய்தார். இதனூடாக, பொதுமக்கள் தொடர்புத்துறை விரிவாக்கமடைந்தது. கற்பனை சக்தியை அதிகரிக்கச் செய்கின்ற ஊடகமாகவும், பாமர மக்களாலும் தொடர்பாடல் செயன்முறையில்



ஈடுபடக்கூடிய வாய்ப்புக்களை செவிப்புல ஊடகம் என்ற அடிப்படையில் வானொலி உருவாக்கியது.

இதன்பின்னர், கட்புல-செவிப்புல ஊடகமாக தொலைக்காட்சி மக்களின் விருப்புக்குரிய தொடர்பாடல் கருவியாக காணப்பட்டது. காற்றில் கலந்துவரும் மின்காந்த அலைகளை உள்வாங்கி மறுபடியும் ஒளிச்சமிக்ஞையாக மாற்றிப் படமாக தொலைக்காட்சி காட்சிப்படுத்தியது. செய்திகளை காட்சி ரீதியில் நுகர்வதற்கான வாய்ப்புக்களையும் கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் கறுப்பு, வெள்ளை நிறங்களைக் கொண்டிருந்த தொலைக்காட்சி பின்னர் பலவர்ண காட்சிப்படுத்தல்களை வழங்குகின்ற பொதுஜன ஊடகமாக மாற்றம் பெற்றது.

(தொடரும்)

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறக்கை இல்லாத மின்விசிறி





மின்விசிறியில் உள்ள இறக்கைகள்தான் காற்று வீசுவதற்கு காரணமாக இருக்கின்றன. எனினும், இறக்கைகள் இல்லாத; ஆனால், காற்று வீசக்கூடிய விசிறியைப் பார்த்திருக்கின்றீர்களா?

இந்த மின்விசிறியின் கீழே உள்ள துளைகளினூடாக வெளிப்புறக் காற்றானது மோட்டார் மூலம் உள் இழுக்கப்பட்டு, அந்தக் காற்று மேலே உள்ள வட்ட வடிவ வளையத்தினுள் செலுத்தப்படுகின்றது. அந்த வட்ட வளையத்தின் உள்ளே இருக்கும் சிறு சிறு தகடுகள் அந்தக் காற்றை உள்வாங்கி வெளிவிடுகின்றன. அப்போது அந்தக் காற்றுடன் மேலும் வெளிப்புறக்காற்றும் இணைந்து அதிக அளவிலான காற்று நமக்குக் கிடைக்கின்றது.

இறக்கைகள் உள்ள மின்விசிறியில் இருந்து கிடைக்கும் காற்றைவிட, இறக்கைகள் அற்ற இந்த விசிறியில் இருந்து ஒரே அளவில் சீராக காற்று கிடைக்கின்றது என்பதே இதன் சிறப்பம்சமாகும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## விஜய் நுட்பம்

2013, பெப்ரவரி, 27, புதன்கிழமை

# கண்களைக் காத்திடும் இணையத்தளம்





நவீனத்துவ வாழ்க்கை முறைகளில் கணினியின் பயன்பாடு தவிர்க்க முடியாததாகவே உள்ளது. எனினும், நீடித்த கணினி பயன்பாட்டால் உங்கள் கண்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை நீங்கள் தவிர்க்க முடியும். இதற்கு செய்ய வேண்டியதெல்லாம்.... கணினியைப் பயன்படுத்தும்போது, இடைக்கிடையே உங்கள் கண்களுக்கு ஓய்வு அளிப்பதுதான்.

அதாவது, தொடர்ச்சியாக பல மணி நேரங்களுக்கு கணினித் திரையையே பார்த்துக்கொண்டிருக்காமல், இடைக்கிடையே சிறிது நேரம் கணினித் திரையில் இருந்து பார்வையை விலக்கி, கண்பார்வையை வேறு திசையில் செலுத்தவேண்டும். ஆனால், இதை தவறாமல் செய்வதே நலமானது. இல்லாவிட்டால் பிற்காலத்தில் பாதிப்புகளையே எதிர்கொள்ள வேண்டிவரும். ஆக, இதனைத் தவறாமல், ஞாபகப்படுத்துவதற்காக, உருவாக்கப்பட்டுள்ளதுதான் 'eye-break' இணையத்தளம்.

உங்கள் கண்களுக்கு ஓய்வு தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தளம், 20 நிமிடங்களுக்கு ஒரு தடவை குறைந்தது 20 நொடிகளாவது, 20 அடி தூரத்தில் உள்ள ஏதாவது ஒரு பொருளைப் பாருங்கள், என்று உங்களுக்கு அறிவித்தலை விடுக்கின்றது.

அழகிய பின்னணியில் முகப்புப் பக்கத்தின் நடுவே, இந்த அறிவிப்பைக் கொண்டுள்ளவாறு இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், அதன் அருகிலேயே, அடுத்த ஓய்விற்கான நேரத்தைக் காட்டிக்கொண்டே இருக்கும். இத்தளத்தை செயற்படுத்தி வைத்தால் சரியான நேரத்தில் கண்களுக்கு ஓய்வளிக்க உதவும். இதற்கான இணையத்தள முகவரி www.eye-break.tk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தொல்லை தரும் இணையத்தளங்களை தடை செய்வதற்கு....




இணையத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது, சில தளங்கள் Open ஆகி உங்களுக்கு இடையூறுகளை அளிக்கலாம்.

அவ்வாறான தளங்களை Block செய்வதற்கு 'The Web Blocker' என்ற மென்பொருள் பயன்படுகிறது. இதற்கு முதலில் குறித்த மென்பொருளை thewebblocker.com/ என்ற இணையத் தளத்தினூடாக, தரவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவிக்கொள்ள வேண்டும். அவ்வாறு நிறுவும் போது, ClaroBrowser Tool Bar, PC Utilities Pro, Babylon போன்றவற்றை Install செய்யலாமா? என்று கேட்கப்படும். அப்போது Decline என்பதை Click செய்யவும். மென்பொருளை நிறுவிய பின், குறித்த மென்பொருளை Open செய்யுங்கள். அப்போது தோன்றும் விண்டோவில் Add Address to Block List என்று காட்டப்படும். இதில் நீங்கள் Block செய்யவேண்டிய தளத்தின் முகவரியைக் கொடுக்கவும். இதன்பின்னர் நீங்கள் குறித்த அத்தளத்தை Open செய்தால், Error என்ற அறிவிப்புத்தான் வரும்.




அதன்படி, இந்த மென்பொருளை உங்கள் கணினியில் நிறுவிக்கொள்வதனூடாக, இணையத்தைப் பயன்படுத்தும்போது, உங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் எத்தகைய தளங்களையும் நீங்கள் Block செய்துகொள்ளலாம்.



## சிந்தனை மொழி

உலகிற்கு அரசனாக இருக்க வேண்டுமானால், முதலில் உன் மனதுக்கு சேவகனாக இருக்க வேண்டும் -

மாவீரன் அலெக்சாண்டர்.



மைக்ரோசொஃப்டின் Notepad text editor மென்பொருளிற்கு மாற்றீடாக அறிமுகப் படுத்தப்பட்ட, மற்றுமொரு மென்பொருளே 'Notepad++' ஆகும்.


# Notepad++ இன் புதிய வெளியீடு

முற்றிலும் இலவசமாகக் கிடைக்கக்கூடிய இம்மென்பொருளில் உலகிலுள்ள பல்வேறு மொழி களை அடிப்படையாகக்கொண்ட text களை edit செய்யும் வசதி காணப்படுவதுடன், மேலும் பல வசதிகளும் உள்ளன.

இதுவரையில் சுமார் 27 மில்லியன் தரவிறக்கங்கள்




செய்யப்பட்ட Notepad++ மென்பொருளானது, சில புதிய அம்சங்களுடன் முன்னைய பதிப்பில் காணப்பட்ட தவறுகள் நீக்கப்பட்டு தற்போது Notepad++ 6.3 எனும் புதிய பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான தரவிறக்கச் சுட்டி http://notepad-plus-plus.org/download/v6.3.html ஆகும்.




# மறந்துபோன Software key ஐ கண்டுபிடிப்பது எப்படி?

கணினியில் நாம் பல software களை install செய்து பயன்படுத்தி வருகிறோம். சிலநேரம் குறிப்பிட்ட மென்பொருளின் Licence key ஐ நாம் மறந்துவிடுவோம். அதை இன்னொரு கணினியில் install செய்யும்போது, தடுமாறிப்போவோம். இவ்வாறான நிலையினைத் தவிர்த்துக்கொள்வதற்காக Licence key ஐ எப்படி கண்டுபிடிப்பது என்று இங்கு பார்ப்போம்.



படம் 1



இச்செயற்பாட்டை ஒரு மென்பொருளைப் பயன்படுத்தியே செய்ய வேண்டும்.

1. முதலில் Weeny Free key Recovery Software என்ற மென்பொருளை Download செய்துகொள்ளுங்கள்.

2. இதை உங்கள் கணினியில் install செய்யும்போது, Babylon போன்று ஏதேனும் வந்தால் அதை தவிர்த்துவிட்டு install செய்யவும்.

3. install செய்து முடிந்தவுடன் அதை Open செய்தால், கீழே (படம் 1 இல்) உள்ளது போல வரும். அதில் Windows licence key, Ms Office key மற்றும் சில முக்கிய software களின் keyகள் காண்பிக்கப்படும்.

4. இவைதவிர, அனைத்து software களின் key ஐயும் காண படம் 2 இல் உள்ளதுபோல் scan plus என்பதை click செய்யுங்கள்.



படம் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்

# பேனா அளவிலான அதிநவீன Scanner



அசுர வளர்ச்சி கண்டுவரும் தொழில்நுட்பத்தினால் இலத்திரனியல் சாதனங்களின் உருவ அளவு குறுகி வருவதுடன், அவற்றின் வினைத்திறன்களும் அதிகரித்து வருகின்றன. இதன் அடிப்படையில், தற்போது பேனா அளவே ஆன Scanner ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



5 மெகாபிக்சல் சென்சாரினைக் கொண்ட இந்த Scanner ஆனது, 2048x1536 Pixel Resolution இல் புத்தகங்கள், பத்திரிகைகளில் உள்ள தகவல்களை நிழற்படமாகப் பிரதி செய்வதுடன், அவற்றினை சேமிப்பதற்காக 1 GB சேமிப்பகத்தினையும் கொண்டுள்ளது. அத்துடன், இச்சாதனத்தில் Recording வசதியும் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# E-paper Touchscreen Tablet

கைக்கணினிகளின் (Tablet) தொழில்நுட்பப் புரட்சியின் மற்றுமொரு படைப்பாக E-paper Touchscreen Tablet அறிமுகமாகியுள்ளது. இந்த கைக்கணினி 10.7 அங்குல அளவுடைய திரையினைக் கொண்டுள்ளதோடு, இதன் தொடுதிரையானது, மீள்தன்மை உடையதாகவும் காணப்படுகின்றது.



Intel, Plastic Logic மற்றும் Queen's University ஆகியவை இணைந்து அறிமுகப்படுத்தும் இந்த E-paper Touchscreen Tablet ஆனது, Core i5 Processor இனைக்கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.







# வீடியோ கேம்களை கையாள்வதற்கான மவுஸ்கள்



நீங்கள் கணினியில் வீடியோ கேம்களை விளையாடும்போது, அவற்றை சிறந்த முறையில் கையாள்வதற்கென அதிநவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய மூன்று வகையான மவுஸ்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. Zalman எனும் நிறுவனமே இந்த மவுஸ்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றுக்கு ZM-GM1, ZM-M400, ZM-M250 என பெயரிடப்பட்டுள்ளது. இந்த மவுஸ்கள் ஆறு பொத்தான்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளதுடன், பயனர்கள் இலகுவாக கையாளக்கூடிய வகையிலான வடிவத்தினையும் கொண்டுள்ளன. இந்த மவுஸ்களுடன் அவற்றுக்குப் பொருத்தமான Mouse pad களையும் இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

# மீள்தன்மை கொண்ட ஸ்பீக்கர்கள்



ஜப்பானின் Fujifilm நிறுவனமானது, மீள்தன்மை கொண்ட பதார்த்தத்தினால் ஆன ஃபிலிம் ஸ்பீக்கர்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை புகைப்படம் எடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஃபிலிம் ரோல்களின் வடிவிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

'அடுத்த தலைமுறை தொழில்நுட்பம்' என்ற தொனிப்பொருளின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இச்சாதனங்கள், மீள்தன்மைகொண்டதாகக் காணப்படுவது மட்டுமன்றி, உயர்தரத்திலான ஒலியை பிறப்பிக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளமை விசேட அம்சமாகும்.



AMAZING FLEXIBLE SPEAKERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்டோஸ் 7 Shortcut Keys

கணினியில் வேலைகளை செய்யும்போது, அவற்றை மிகவும் சுலபமாகவும் துரிதமாகவும் செய்வதற்கு Shortcut Keyகள் பயன்படுகின்றன. அந்தவகையில், விண்டோஸ் 7 இயங்குதளத்தைக் கொண்ட கணினியில் பணியாற்றும்போது, எமக்கு உதவக்கூடிய சில Shortcut Key கள் பற்றி பார்ப்போம்.

**விண்டோஸ் Key உடன் சேர்த்து கீழ்க்கண்ட Key களை அழுத்தினால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் சில....**

◆ விண்டோஸ் Key உடன் H : அப்போது செயற்பட்டுக்கொண்டிருக்கும் விண்டோ



வினை முழுத் திரைக்குக் கொண்டுவர உதவும்.

◆ விண்டோஸ் Key உடன் I: விண்டோவினை மினிமைஸ் செய்ய அல்லது வழக்கமான அளவிற்குக் கொண்டுவர உதவும்.

◆ விண்டோஸ் Key உடன் Shft மற்றும் Arrow: செயற்பாட்டில் இருக்கும் விண்டோவினை அடுத்த திரைக்கு மாற்ற உதவும்.

◆ விண்டோஸ் Key உடன் D: அனைத்து விண்டோக்களையும் மினிமைஸ் செய்து, Desktop திரையைக் காட்டுகிறது.

◆ விண்டோஸ் Key உடன் E: விண்டோஸ் எக்ஸ்ப்ளோரர் திறக்கப்படும். My Computer Folder காட்டப்படும்.

◆ விண்டோஸ் Key உடன் F: தேடல் விண்டோ காட்டப்படும்.


◆ விண்டோஸ் Key உடன் G: உடன் இணைக்கப்பட்ட சாதனங்களைச் சுற்றிக் காட்டும்.

◆ விண்டோஸ் Key உடன் L: Desktop இனை lock செய்திடும்.


◆ விண்டோஸ் Key உடன் M: அப்போதைய விண்டோவினை மினிமைஸ் செய்ய உதவும்.

◆ விண்டோஸ் Key உடன் R: ரன் விண்டோவினை இயக்கும்.

◆ விண்டோஸ் Key உடன் TAB: முப்பரிமாணக் காட்சி.







# கணினி பாவனையின்போது கட்டாயம் தேவைப்படும் சில அம்சங்கள்

மென்பொருள்கள் இல்லாமல் நாம் கணினியைப் பயன்படுத்தவே முடியாது.



எம்முடைய அனைத்துசெயல்களும் ஏதோ ஒரு மென்பொருளை சார்ந்தே இருக்கும். அவற்றில் ஏராளமானவை எமக்கு இலவசமாகவே கிடைப்பதோடு, அவை அவசியம் எமக்குத் தேவைப்படுபவையாகவும் உள்ளன. எனவே, அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

**Internet Browsers:**

Browser இல்லாமல் நீங்கள் இணையத்தில் செயற்பட முடியாது. தற்போது அறிமுகமாகியுள்ள Internet browser களில் firefox, google chrome என்பன சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றன.

**Antivirus:**

Pendrive அல்லது இணையத்தில் இருந்து ஏதாவதொன்றை Download செய்யும் போது, எமது கணினியில் Virus உள்வாங்கப்பட வாய்ப்புண்டு. அத்தகைய தருணங்களில் அவற்றை தடுக்கவோ அல்லது தவிர்க்கவோ Antivirus மென்பொருள்கள் தேவை. Avast, Microsoft Security Essentials போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**File Compression Software:**

File Compression Software என்பது நாம் அடிக்கடி பயன்படுத்தும் ஒன்றாகும். இவற்றில் Winzip மற்றும் Winrar போன்றவை கட்டண மென்பொருள்கள் ஆகும். இதில் இலவசமாக கிடைக்கக்கூடிய மென்பொருள்களாக 7-zip, zip2fix என்பன காணப்படுகின்றன.

**Image/Graphics editor, paint program and picture Organizer:**

Image editor என்பது எமக்கு அடிக்கடி தேவைப்படும் ஒன்று. இதில் பெரும்பாலான மென்பொருள்கள் எமக்கு இலவசமாகக் கிடைப்பதில்லை. ஆனால், சில எமக்கு இலவசமாகவும் அதேவேளை, பல வசதிகளையும் தருகின்றன. அவற்றிற்கு உதாரணமாக gimpshop, Paint.net, Irfanview, Picasa, Inkscape என்பனவற்றைக் குறிப்பிடலாம்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

* ஐரோப்பிய வரலாற்றில் 'Bloody Sunday' என அழைக்கப்படும் சம்பவம் எது?



1905 இல் ரஷ்யாவின் இரண்டாம் சார் நிக்கொலஸ் மன்னனிடம் தமது குறைகளைத் தெரிவிப்பதற்காகச் சென்ற நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்ட தினமாகும்.

* விஜயபாகு கொலை அல்லது கொள்ளை என இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற சம்பவம் எது?

1521 இல் கோட்டை ராச்சிய மன்னன் 7 ஆம் விஜயபாகுவை அவனது புத்திரர்களான புவனேகபாகு, ரைகம் பண்டார, மாயதுன்னை ஆகியோர் கொலை செய்து கோட்டை ராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்ட சம்பவமாகும்.

* இடதுசாரி அரசியல் கட்சிகள் இலங்கையில் முதலில் உருவாகின. வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 1946 இல் உருவானது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எப்போது உருவானது?

1952 இல்

* இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்கள் உள்ளன. இதில் ஆகக்கூடிய அங்கத்தவர்களை தெரிவு செய்யும் மாவட்டம் கொழும்பு. ஆகக்குறைந்த அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் மாவட்டம் எது?

திருகோணமலை - 4 பேர் மாத்திரம்

* A-9 பாதை: கண்டி - யாழ்ப்பாணம், A-1 பாதை: கொழும்பு-கண்டி ஆகும். A-0 பாதை எது?

கொள்ளுப்பிட்டி - ஸ்ரீ ஜயவர்தனபுர



* இலங்கையின் பிரதான வனவிலங்கு சரணாலயங்கள் எவை?



யால, வில்பத்து, பின்னவல, கல்லோயா, உடவலவ

* 'கும்பமேளா' விழாவினை இந்துக்கள் 12 வருடங்களுக்கு ஒருமுறை கொண்டாடுகின்றார்கள். இது மூன்று நதிகள் சந்திக்குமிடத்தில் நடைபெறுகின்றது. அந்த நதிகளின் பெயர்கள் என்ன?

கங்கை, யமுனை, சரஸ்வதி

* சீக்கிய மதத்தின் வேத நூல் எது? அவர்களது புனித நகரம் எது?



கிரந்த் சாகிப்

அமிர்தசரஸ் நகரம்

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 4996

எம்.இஸட்.மஹ்தி, லபுகொடுவ, இறம்புக்கனை.



அங். இல: 4997

சி.மகிழரசி, இடைக்கட்டு, புதுக்குடியிருப்பு.



அங். இல: 4998

வி.சங்கீதா, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.



அங். இல: 4999

சு.கீர்த்தனா, 1 ஆம் வட்டாரம், முள்ளியவளை.



அங். இல: 5000

என்.எம்.மிர்ஷித், செயிலான் வீதி, கல்முனை-03.



அங். இல: 5001

சி.கவியாழன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



அங். இல:5002

சி.நிரோஜன், துன்னாலை தெற்கு, கரவெட்டி.



அங். இல: 5003

ஜெ.ஜொகானன், கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.



அங். இல: 5004

ந.அஸாம், கோட்டைமுனை, மட்டக்களப்பு.



அங். இல: 5005

என்.எம்.சம்ரின், மன்னார் வீதி, வவுனியா.



அங். இல: 5006

சி.லக்ஷ்மன், வின்சர் அவனியூ, தெஹிவளை.



அங். இல: 5007

முஹம்மது றமீஸ், மீராவோடை, ஓட்டமாவடி-04.

# குழந்தைகளுக்கு மனஅழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள்...

குழந்தைகளின் மனஅழுத்தத்தை அதிகரிக்கும் காரணங்கள் பல உள்ளன. தங்களுக்கு ஏற்பட்டுள்ள மனஅழுத்தத்தை ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதமாக வெளிப்படுத்துகின்றன.



சில குழந்தைகள் முகத்தை தூக்கிவைத்துக்கொண்டு யாருடனும் பேசாமல் உம்மென்று இருக்கின்றன. சில குழந்தைகள் தங்கள் மன அழுத்தத்தைக் கோபமாகவும், ஆத்திரமாகவும் வெளிக்காட்டுகின்றன. சில குழந்தைகள் எப்போதும் கவலையோடு காணப்படுகின்றன. இதற்கெல்லாம் காரணங்கள் இருக்கலாம் என்று குழந்தை மனநல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அவையாவன;

01. குடும்பத்தில் தொடர்ந்து நடைபெறும் குழப்பங்கள், வாக்குவாதங்கள்.

02. பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுடன் குழந்தைக்கு ஏற்படும் உறவு விரிசல்.

03. நட்பில் உண்டாகும் மனவருத்தம்.

04. குடும்பங்கள் பிரிந்துவிடுதல்.

05. மிக நெருக்கமானவர்களின் பிரிவு அல்லது செல்லப்பிராணிகளின் இறப்பு.

06. பெரிதாக ஏற்படும் இழப்புக்கள் அல்லது அதிர்ச்சி ஏற்படுத்திய நிகழ்வுகள்.

07. அடிக்கடி ஏற்படும் உடல்நோய்கள், தொற்று நோய்கள்.

08. குழந்தைகளை ஏனையவர்கள் தவறாகப் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்த முனைதல்.

09. ஏனைய குழந்தைகளின் முரட்டுத்தனம், பிடிவாதம்.

10. பாடசாலையில் அல்லது வெளிச் சமூகத்தில் தொடர்ந்து ஏற்படும் தோல்விகள்.

11. பெற்றோரைப் பாதிக்கும் மன உணர்வுகள் சிலநேரங்களில் குழந்தைகளையும் பாதிப்படையச் செய்தல்.

12. உட்கொண்ட மருந்துகளினால் ஏற்படும் பக்க விளைவுகள்.



இதுபோன்ற காரணங்களினால் குழந்தைகள் மனஅழுத்த நோய்க்கு ஆளாகி அவதிப்படும் சந்தர்ப்பங்கள் அதிகளவில் உள்ளன. சில குழந்தைகளுக்கு இது பரம்பரையாகவும் வரலாம். அத்தகைய குழந்தைகள் மேலே கூறப்பட்ட காரணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்பட்டால்கூட, அதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சமாளிக்கவோ முடியாமல் திணறிப் போய்விடுகின்றன. இதனால், வெகுவிரைவில் மனஅழுத்த நோய்க்கும் ஆளாகி விடுகின்றன. (தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
**PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)**



# விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

படத்தை இங்கே ஒட்டவும்

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

பாடசாலை: ..................................................

வகுப்பு: ..................................................

திகதி: ..................................................

அனுப்ப வேண்டிய முகவரி :

'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

**SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?**

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏன்? எதற்கு? எப்படி?

**✱ தெங்கு தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் வெள்ளி ஆபரணங்கள் எளிதில் கருமையடைகின்றன. அது ஏன்?**



தேங்காய் மட்டைகள் நாளாகும்போது ஐதரசன் சல்பைட் ($H_2s$) வாயுவை உருவாக்குகின்றன. இவை நாளடைவில் சுற்றியுள்ள வாயுமண்டலத்துடன் பரவிக் காணப்படும். வெள்ளியானது (Ag) ஓர் உலோகமாகும். இவ்வுலோகம் மேலே கூறிய வாயுவுடன் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து செயற்படும்போது, வெள்ளி சல்பைட் (Ags) எனும் சேர்வையை உருவாக்குகின்றது. இதனால், வெள்ளி ஆபரணங்கள் கருமையடைகின்றன.

**✱ விமானங்களில் பாவிக்கப்படும் உதிரிப்பாகங்களில் கூடுதலாக Al, Cu எனும் (அலுமினியம், செப்பு) உலோகங்களை ஏன் பயன்படுத்துகின்றார்கள்?**

Al, Cu இவ்விரு உலோகங்களும் பாரமற்றது, இலகுவில் துருப்பிடிக்காதது. இக்காரணத்தால் இந்த உலோகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.



**✱ மண்ணெண்ணெய் விளக்குகளில் உப்புக்கற்கள் (Nacl) சிலவற்றை இடும்போது, ஏன் விளக்கின் பிரகாசம் அதிகரிக்கின்றது?**



சோடியம் க்ளோரைட், (Nacl) தகனம் அடையும்போது அதன் சுவாலை மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும். இவற்றை மண்ணெண்ணெய் விளக்குகளில் இடும்போது, அவை விளக்கின் திரியில் படிந்து பிரகாசமான ஒளியைத் தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வல்லவனுக்கு வல்லவன்

அடர்ந்த ஒரு பெரிய காட்டில், சிங்கராஜாவும் மற்றும் பல விலங்குகளும் வாழ்ந்து வந்தன. சிங்கம் தனது பசியைப் போக்கிக் கொள்ள தினமும் ஏதாவது ஒரு விலங்கைக் கொன்று தின்றுவிடும். இதனால், சிங்கத்துக்கு இரையாகும் விலங்குகள் அனைத்தும் மிகுந்த கவலையோடு வாழ்ந்தன.

ஒருநாள் விலங்குகள் அனைத்தும் ஒன்றுகூடி, ரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தி சிங்கத்திடம் இருந்து தப்பிக்க ஆலோசனை செய்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு யோசனைகளைக் கூறின. யாருடைய யோசனைகளும் சரியானதாகப் படவில்லை. அப்போது, ஒரு மனிதர் அந்தக் காட்டு வழியாக வருவதை விலங்குகள் கண்டன. கையில் துப்பாக்கி ஒன்றையும் அவர் வைத்திருந்தார். காட்டைத் தாண்டி உள்ள அடுத்த ஊருக்கு அவர் சென்றுகொண்டிருப்பதாகவும் வழியில் விலங்குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ளவே அவர் துப்பாக்கியோடு வந்திருப்பதாகவும் குசு குசு என்று விலங்குகள் தம்முள் பேசிக்கொண்டன.

எனினும், விலங்குக் கூட்டத்தைக் கண்ட அந்த மனிதர் அவற்றை சுடுவதற்கு துப்பாக்கியை எடுத்தார். இதனைச் சிறிதும் எதிர்பார்க்காத விலங்குகள் ஒன்றுகூடி அவரது காலில் விழுந்தன. அந்த மனிதர் மிகுந்த திகைப்புடன் விலங்குகளைப் பார்த்தார். விலங்குகள் தம் காலடியில் வந்து விழுவதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணிய அவர் துப்பாக்கியை அதன் உறையில் போட்டுவிட்டு அமைதியாக நின்றார்.


அப்பொழுது அதிரவைக்கும் இடியோசைபோல கர்ஜனை செய்து வருகின்ற சிங்கத்தைப் பார்த்து அனைத்து விலங்குகளும் நடுங்கிப்போயின. அப்போது அந்த மனிதருக்கு விலங்குகளின் பயமும், அவை தன்னிடம் பணிவு காட்டுவதன் அர்த்தமும் புரிந்தது.

காட்டிற்கே அதிபதியாகவும், வல்லவனாகவும் இருக்கும் இந்த சிங்கராஜனின் அச்சுறுத்தலால் தான் இவை பயம் கொள்கின்றன. நான் இச்சிங்கத்தைக் கொன்றுவிட்டால், இவை அமைதியாக வாழும் என உணர்ந்தவராய், துணிவுடன் துப்பாக்கியை எடுத்தார்.

அப்போது மான் ஒன்றின்மீது பசியோடு பாய்ந்த சிங்கத்தை, தன் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்டார். பல குண்டுகள் அதன் உடலைத் துளைத்தன. ரத்த வெள்ளத்தில் சிங்கம் இறந்து வீழ்ந்தது.

விலங்குகள் அனைத்தும் தங்களைக் காப்பாற்றிய அந்த மனிதரைச் சுற்றி சந்தோஷமாக ஆரவாரம் செய்தன. மடிந்த சிங்கத்தை அங்கிருந்த பள்ளத்தில் தள்ளி மண்ணால் மூடின. அந்த மனிதரை விலங்குகளெல்லாம் ஒன்றுசேர்ந்து மகிழ்வுடன் வழியனுப்பி வைத்தன.

## போல் ஏர்லிச்



போல் ஏர்லிச் அவர்கள் 1854 ஆம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்தார். இவர் சிறுவயது முதல் ரசாயனத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பல வேதிப்பொருட்களைப் பற்றி அறிந்து கொண்டு புதிய புதிய வேதிப் பொருட்களைத் தேடினார். வெப்ப மண்டலப் பகுதியில் ஏற்படும் நோயை சாயமேற்றி அழிக்க வேண்டும் என முயற்சிகளைச் செய்தார்.

இவர் கண்டுபிடித்த 'திரிபனோசோம்' எனும் கிருமிகளை அழிக்கும் சாயத்தை அடிப்படையாகக் கொண்டு இவர் வேதிப் பொருள்கள் மூலம் சாயம் தயாரித்துக் கிருமிகளை அழிக்க ரசாயன ஆராய்வுகளில் ஈடுபட்டார். இவர் மேலும் பல மருந்துகளைக் கண்டுபிடித்தார். இவரது மருத்துவ சேவையைப் பாராட்டி 1908 ஆம் ஆண்டு உடலியல் மற்றும் மருத்துவத்திற்கான நொபெல் பரிசு வழங்கப்பட்டது.

பல சிறப்புக்களைக்கொண்ட மருத்துவ அறிஞர் போல் ஏர்லிச் தன்னுடைய 61 ஆவது வயதில் அதாவது 1915ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.


எச்.எம்.அஸ்லம்,
மட்/ஒட்டமாவடி தே.பாட.,

## இல்லாத நாடுகள்

- வரி விதிப்பு இல்லாத நாடு - வடகொரியா
- காக்கைகள் இல்லாத நாடு - சிங்கப்பூர்
- ஆறுகள் இல்லாத நாடு - சவூதி அரேபியா
- பாம்புகள் இல்லாத நாடு - அயர்லாந்து
- வருமான வரி இல்லாத நாடு - குவைத்
- பிரதம மந்திரிகள் இல்லாத நாடு - சுவிற்சர்லாந்து
- இராணுவமே இல்லாத நாடு - ஹொஸ்டாரிக்
- கரடிகள் இல்லாத நாடுகள் - ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா

எம்.பி.எம்.ஷம்ரி
மொ/பகினிகஹவெல, முஸ்லிம் மத்திய கல்லூரி.

## உடலுக்கு வலிமை சேர்க்கும் நீர்



மனிதர்களின் உடலில் 70 சதவீதம் நீருள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதன் அளவு ஒவ்வொருவருடைய வயது மற்றும் உடலமைப்புக்கு ஏற்ப மாறுபட்டிருக்கும். உடல் மெலிந்து காணப்படுபவர்களின் உடலில் உள்ள நீரின் அளவை விட, உடல் பருமனாக உள்ளவர்களின் உடலில் உள்ள நீரின் அளவு குறைவாகவே இருக்கும்.

அதாவது, பருமனாக உள்ளவர்களின் உடலில் 'அடிபோஸ்' எனும் கொழுப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இக்கொழுப்பில் நீரின் அளவு மிகவும் குறைவு. உடலில் உள்ள நீரின் அளவு வயது அதிகரிக்க, அதிகரிக்க குறைவதுடன், தசைகளும் சுருங்கி அங்கு கொழுப்புச் சேரும்போது நீரின் அளவு மேலும் குறைகின்றது. உடலில் உள்ள நீர்ச்சத்துக் குறையும்போது, சோர்வு, மயக்கம் என்பன ஏற்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீர்ச்சத்துள்ள காய்கறிகள் மற்றும் பானங்களை உட்கொள்ளலாம்.

நீரானது உடலிலுள்ள நச்சுப் பொருட்களை கழிவுகள்மூலம் வெளியேற்ற உதவுகின்றது. தினமும் காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் மூன்று கப் வெதுவெதுப்பான நீர் அருந்தி வந்தால் மலச்சிக்கல் நீங்குவதோடு, உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்களும் கரைந்து உடல் ஆரோக்கியமாக இருக்க உதவும்.

ஏ.சீ.எப்.நஸ்ரியா,
கிரி/சுலைமானியா மு.வித்.,
குறிகொடுவ, நாரம்மல.



## முக்கியமான தொகுப்பைக் குறிக்கும் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. சாவி | - கொத்து | 06. குன்று | - தொடர் |
| 02. திராட்சை | - குலை | 07. குதிரை | - வரிசை |
| 03. கல் | - மேடு | 08. ராணுவ வீரர் | - தொகுதி |
| 04. பன்றி | - கூட்டம் | 09. நட்சத்திரம் | - கூட்டம் |
| 05. தீவு | - தொகுதி | 10. மான் | - கூட்டம் |

எஸ்.தும்மிகா, காவத்தை.

## உணவுப் பழக்கம்

- இலைகளை உண்பவை - குதிரை, மாடு, நத்தை, வெட்டுக்கிளி.
- அனைத்தும் உண்பவை - மனிதன், காகம், நாய்.
- ஊண் உண்பவை - புலி, சிங்கம்.
- திரவங்களை உண்பவை - நாடாப்புழு, நுளம்பு, மூட்டைப்பூச்சி.
- அழுகல் உண்ணிகள் - இறால், நண்டு.
- பழம் உண்பவை - கிளி, அணில், வௌவால்.
- பூச்சிகளை உண்பவை - தேரை, பல்லி, ஓணான்.

எப்.அப்லா,
அந்நூர் மத்.கல்.,
பாணகமுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நவீனகால ஓவியங்கள் காணப்படும் இடங்கள்

## கண்டி திரித்துவ ஆலய ஓவியங்கள்





இங்குள்ள ஓவியங்களை டேவிட் பெயின்டர் என்பவர் வரைந்துள்ளார். இங்கு ஐந்து ஓவியங்கள் காணப்படுகின்றன. இந்த ஓவியங்கள் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

**❋ தோழர்களின் பாதங்களைக் கழுவுதல்:**

இந்த ஓவியம் 12x8 அடி அளவு கொண்டது.யேசுநாதர் தனது தோழர்களின் பாதங்களைக் கழுவுதல் பற்றி வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில் 9 மனித உருவங்கள் காணப்படுகின்றன. இங்கு வெள்ளை, கறுப்பு, பச்சை, நீலம் ஆகிய நிறங் கள் அதிகளவில் பயன்படுத்தப்பட் டுள்ளன.

**❋ சிறந்த விருந்து உபசாரம்:**

இந்த ஓவியம் 12x8 அடி அளவு கொண்டது. இங்கு 7 மனித உருவங்கள் காணப்படுகின்றன. இதில் சமய குரு ஒருவரும் காணப்படுகின்றார். காயம்பட்டவருக்கு சிகிச்சை வழங்கும் காட்சியும் குதிரையொன்றும் காணப்படுகின்றது. காயப்பட்டவரைச் சுற்றி பலர் காணப்படுகின்றனர். மலைப்பாங்கான மரங்கள் நிறைந்த பகுதியாக இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.

**❋ சிலுவையில் அறைதல்:**

இங்குள்ள ஏனைய மூன்று ஓவியங்களும் சிலுவையில் அறைந்த சம்பவத்தை சித்தரிப்பதாக வரையப்பட்டுள்ளன. இங்குள்ள சுற்றாடல் மலைப்பாங்கான பகுதியைவிட, வித்தியாசமான சூழலாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சமதரை யான நிலமும் தூரத்தில் நீர் நிலையொன்று இருப்பதும் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆணியடிக்கப்பட்டுள்ள இரண்டு கள்வர்களின் உருவங்களுக்கு அருகில் யேசுநாதரை சிலுவையில் அறைந்த காட்சி வரையப்பட்டுள்ளது.






கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பரணீதரன்-காமிலா தம்பதியரின் செல்வப் புதல்வி பிரித்திகா, தனது மூன்றாவது பிறந்தநாளை 02.03.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் தென்கோவை கற்பக விநாயகர் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: தி.சிதம்பரநாதன்)



ஹபுகஸ்தலாவையைச் சேர்ந்த அலாவுதீன்- பெறோஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமத் தானிஷ், தனது ஐந்தாவது பிறந்தநாளை 24.02.2013 அன்று கொண்டாடினார். இவரை பெற்றோர், சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
க.பெ.எண் 2037
கொழும்பு



மாவனல்லை கொட்டவத்தையைச் சேர்ந்த மொஹமட் றியாஸ்-பாத்திமா பானு தம்பதியரின் செல்வப் புதல்வி றீமா, தனது முதலாவது பிறந்தநாளை 24.02.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.




கண்டி பூர்ணவத்தையைச் சேர்ந்த ராம்–ஜெயந்தி தம்பதியரின் செல்வப் புதல்வன் நிக்கேஷ், தனது முதலாவது பிறந்தநாளை 16.02.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு களுத்துறை மாவட்ட தோட்டப் பாடசாலை மாணவர்களின் போட்டி நிகழ்வுகள் 'நேபொட டெம்போ' தோட்டத்தில் நடைபெற்றன. பனிஸ் உண்ணல், இசைக்கதிரைப் போட்டி, போத்தலில் நீர் நிறைத்தல், தேசிக்காய் சமநிலைப்போட்டி என பலவிதமான போட்டிகள் நடைபெற்றன. கொழும்பு கெப்பிட்டல் லயன்ஸ் கிளப் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வித்யா நிறுவனத்தின் செயலாளர் லயன் வி.கே.பாலசுப்ரமணியம் மேற்கொண்டிருந்ததுடன், லயன் உறுப்பினர்களான வி.சிவஞானம், பி.ஜெயசுந்தாம், களுத்துறை மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி சமன் கீர்த்திசிங்ஹ, வித்யா நிறுவன செயலாளர் எம்.ராஜசேகர் ஆகியோர் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களையும் வழங்கினர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
க.பெ.எண் 2037
கொழும்பு



மார்க் ஜோசப் லைக்கல், அந்தோனியார் கல்., கட்டுகஸ்தோட்டை.



பவித்திரா,
தல்துவ மு.ம.வித்., அவிசாவளை.



சி.கீர்த்திகன்,
கலைமகள் வித்., முள்ளியவளை.



பீ.ஸரூபணன்,
திருக்கோணேஸ்வரா வித்.,
திருகோணமலை.




என்.பாத்திமா இல்மா,
புர்க்கான் மு.ம.வித்., நமடகஹவத்த.



நி.நிலோஜி,
கொக்குவில் இந்.கல்., கொக்குவில்.



பாத்திமா ஸல்மா,
மு.ம.வித்., களுத்துறை.



கொ.மோகனநிஷா,
யா/இளவாலை கன்னியர் மட.வித்.,
இளவாலை.



ர.புவிராஜ்,
இ.ம.ம.வித்., வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடிமனை ஏற்படுத்தும் 'வைரஸ்'

இங்கு பெரிதாக்கப்பட்டு காட்டப்பட்டிருக்கும் பிரதிபிம்பங்கள் தடிமனை ஏற்படுத்தும் வைரஸ் ஆகும். உலகின் அதிவேக கணினியினால் இந்த பிம்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தடிமனுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய வழிமுறைகளை வைரஸ் தடுப்பு சிகிச்சைகளை இந்த வியப்பூட்டும் உருவக்காட்சிகளின் ஊடாக, கண்டுபிடிக்க முடியும் என்று



விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.


அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் இதுபற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் குழு, தடிமனை உருவாக்கும் வைரஸ்களில் நூற்றுக்கு ஐம்பது சதவீத வைரஸின் Genome of the Human Rhinovirus இன் முழுமையான மாதிரியினை உருவாக்கியுள்ளது. இந்த வைரஸ் பற்றி அறிந்துகொண்டு அதன் பரவலைத் தடுப்பதற்கான ஒரு மருந்தைக் கண்டுபிடித்து பரிசீலனைகளை மேற்கொண்டு வரும் பயோட்டா நிறுவனத்திற்கு இங்கு காட்டப்பட்டுள்ள இந்த மாதிரி பேருதவி புரியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த மருந்துவகை பரிசோதனை மட்டத்திலேயே இன்னும் உள்ளது. இளைப்பு நோயாளர்கள், நுரையீரல் சார்ந்த நோயாளர்கள் போன்றோரை இலக்காகக்கொண்டே, இந்த மருந்து உருவாக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், சாதாரண தடிமன் தீவிர நோயாக மாறக்கூடிய அபாயம் உள்ளவர்களுக்கும் இந்த மருந்து பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும்.


IMB Blue Gene q என்ற புதிய அதிவேக கணினியினால் முதன்முதலாக உருவாக்கப்பட்ட முப்பரிமாண உருவங்களே இவையாகும். இந்தப் புதிய கணினி கடந்த ஜூலை மாதம் அவுஸ்திரேலிய மெல்பர்ன் பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்திருந்தது.

சென்.வின்சன்ட் மருத்துவ ஆய்வு நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பேராசிரியர் மைக்கல் பாக்கர் இந்த ஆய்வுகளுக்கு தலைமை வகிக்கின்றார். ரைனோ வைரஸ் இந்த மருந்துக்கு காட்டும் எதிர்வினையினைப் பொறுத்துப் பெரும்பாலான நோய்களுக்கு சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன், இந்த ரைனோ வைரஸானது, போலியோ நோயை ஏற்படுத்தும் வைரஸ் பிரிவைச் சார்ந்தது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

"ஒரு வைரஸில் தற்போதுள்ள மருந்து செயற்படும் விதம் தீவிரமடைந்தால் அந்த வைரஸைச் சேர்ந்த இதர வைரஸ்களுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய எதிர்வைரஸ் மருந்துகளை உற்பத்தி செய்ய முடியும். இதனால், உலகம் முழுவதும் பல உயிர்களைக் காப்பாற்ற வழி கிடைக்கும்" என்று பேராசிரியர் பாக்கர் மேலும் கூறுகின்றார். IBM நிறுவனத்தினதும் மற்றும் கணினி வல்லுனர்கள்



அவுஸ்திரேலிய மெல்பர்ன் பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர் ஒருவர் அதிவேக கணினியினைப் பயனபடுத்தி தடிமனை உருவாக்கும் வைரஸின் உருவத்தினைப் பெருப்பித்து முப்பரிமாண மாதிரி படத்தினை உருவாக்கியுள்ளார். அதன் உட்புற வெட்டுமுகப்பகுதியினையே இங்கு காண்கிறீர்கள்.



H.P.V வைரஸின் பெருப்பிக்கப்பட்ட மாதிரி உருவத்தினை உலகின் அதிவேக கணினியினைப் பயனபடுத்தியே ஆய்வு குழுவினர் உருவாக்கியுள்ளனர்.



இந்த வைரஸின் மாதிரியினைப் பயன் படுத்தி சிகிச்சை அளிப்பது தொடர்பாக, விஞ்ஞானிகள் ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். இங்கு மஞ்சள் நிறத்தில் குறிப்பிடப் படுவது கலத்தினுள் மருந்தை வைக்க விஞ் ஞானிகள் உத்தேசித்துள்ள பகுதியாகும்.

விக்டோரியா உயிரியல் கணினி ஆரம்ப பிரிவினரதும் பங்களிப்புடன், இந்த முப்பரிமாண மாதிரியினைத் தயாரிக்க பேராசிரியர் பாக்கர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

மனிதக் கலங்களில் நிகழும் பொறிமுறை மாற்றங்களையும், அதனை மிக நுணுக்கமாக அவதானிக்கவும் குறிப்பாக மருந்துகளின் இயக்கங்களை அறியவும் இந்த அதிவேக கணினி தொழில்நுட்பம் வாய்ப்பளித்துள்ளதாக பாக்கர் கூறுகின்றார். இதனூடாக, புதிய எதிர்வைரஸ் மருந்து சிகிச்சைக்கான வழிமுறையினை துரிதப்படுத்தவும், அவற்றை முன்னேற்றவும், வாய்ப்பு கிடைக்கின்றது. அத்துடன், உலகம் முழுவதும் பல நோயாளர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்றும் பேராசிரியர் பாக்கர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"இந்த ஆய்வுப் பணிகளுக்காக, பயன்படுத்தப்பட்ட அதிவேக கணினி தென் அரைக்கோளப்பகுதியில் உள்ள மிக வேகமான கணினியாகும். வேகத்தில் இந்த கணினி உலகில் 31 ஆவது இடத்தைப் பெறுகின்றது" என்று கலாநிதி ஜோன் வெக்னர் கூறுகின்றார். விக்டோரிய உயிரியல் விஞ்ஞான ஆய்வு நிலையத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் IBM முகாமையாளராக இவர் செயலாற்றுகின்றார்.

ஒரு செக்கனில் 836 த்ரில்லியன் கணக்கீடுகளை இந்த கணினி மேற்கொள்ளும் என்று வெக்னர் தெரிவித்தார். அத்துடன், எரிசக்திப் பாவனையில் மிகவும் சிக்கனமான வினைத்திறன் மிக்க கணினியாகவும் இக்கணினி விளங்குகின்றது.

அனைத்துவித நோய்களுக்கும் 70 சதவீதமான பங்களிப்பினை ரைனோ வைரஸ் செலுத்துகின்றது. இதில் 50 சதவீதமான நோயாளர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்படுகின்றனர்.

தீவிரமான நுரையீரல் சார்ந்த நோயாளர்களில் 35 சதவீதமானவர்கள் வருடாந்தம் இந்த ரைனோ வைரஸ் தாக்கத்திற்குள்ளாகின்றனர். தடிமனை ஏற்படுத்தும் 200 வகையான வைரஸ்களில் ரைனோ வைரஸ் அதாவது, நாசி சார்ந்த நோய்களை உருவாக்கும் வைரஸ்தான் சுற்றுச்சூழலில் பரவலாக வியாபித்துள்ளது.

இந்த வைரஸ் கண்களுக்கு புலப்படாத மிகவும் நுண்ணிய தன்மை வாய்ந்தது. இந்த ரைனோ வைரஸ்களை ஒன்று டன் ஒன்று இணைத்தால் ஒரு மில்லிமீற்றர் அளவை நிரப்பு வதற்கு 50,000 வைரஸ்கள் தேவைப்படும் அளவிற்கு அவை நுண்ணிய அளவைக் கொண்டவையாகும்.

**சைக்கிள் வெற்றியாளர் போட்டி இல - 13**



எஸ்.எம்.சஜித்,
11, உகுரஸ்பிட்டிய,
கட்டுகஸ்தோட்டை, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் மரக்கறிக் கடையில் வியாபாரிக்கும் ஆனந்தனுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

වෙළෙන්දා: මහත්තයා එන්න, හොඳ එළවළු තියෙනවා. මොනවද ඕනේ?
மஹத்தயா என்ன, ஹொந்த எளவளு தியெனவா. மொனவத ஒனே?
வியாபாரி: வாங்க ஐயா, நல்ல மரக்கறி இருக்கிறது. என்ன வேண்டும்?

ආනන්ද: වම්බටු කිලෝ එකක් කීයද?
வம்படு கிலோ எகக் கீயத?
ஆனந்தன்: கத்தரிக்காய் ஒரு கிலோ என்ன விலை?

වෙළෙන්දා: වම්බටු කිලෝ එකක් රුපියල් දෙසීයක් වෙනව මහත්තයා.
வம்படு கிலோ எகக் ருபியல் தெசீயக் வெனவ மஹத்தயா.
வியாபாரி: கத்தரிக்காய் ஒரு கிலோ இருநூறு ரூபாய் ஆகிறது ஐயா.

ආනන්ද: මිල වැඩියිනේ.
மில வெடிய்னே.
ஆனந்தன்: விலை அதிகமே.

වෙළෙන්දා: පහුගිය දවස්වල ගංවතුරනේ මහත්තයා. ඒකයි මිල වැඩි.
பஹுகிய தவஸ்வல கங்வதுரனே மஹத்தயா. ஏகய் மில வெடிய்.
வியாபாரி: கடந்த நாட்களில் வெள்ளம்தானே ஐயா. அதுதான் விலை அதிகம்.

මහත්තයාට කිලෝ කීයක් ඕනේද?
மஹத்தயாட்ட கிலோ கீயக் ஒனேத?
ஐயாவுக்கு எத்தனை கிலோ வேண்டும்?

ආනන්ද: මට කිලෝ දෙකක් ගන්න ඕනේ.
மட்ட கிலோ தெகக் கன்ன ஒனே.
ஆனந்தன்: எனக்கு இரண்டு கிலோ வாங்க வேண்டும்.

වෙළෙන්දා: එහෙනම් කිලෝ එක රුපියල් එකසිය පනහ ගානේ දෙන්නම්.
எஹெனம் கிலோ எக ருபியல் எகஸிய பனஹ கானே தென்னம்.
வியாபாரி: அப்படியானால் ஒரு கிலோ நூற்று ஐம்பது ரூபாவுக்குத் தருகிறேன்.

ආනන්ද: මුරුංගා කීයද?
முருங்கா கீயத?
ஆனந்தன்: முருங்கை என்ன விலை?

වෙළෙන්දා: මුරුංගා කිලෝ එකක් රුපියල් පනහයි.
முருங்கா கிலோ எகக் ருபியல் பனஹய்.
வியாபாரி: முருங்கை ஒரு கிலோ ஐம்பது ரூபாய்.

ආනන්ද: මුරුංගා කිලෝ එකක් දෙන්න.
முருங்கா கிலோ எகக் தென்ன.
ஆனந்தன்: முருங்கை ஒரு கிலோ தாருங்கள்.

වෙළෙන්දා: වෙන මොනවද ඕනෙ මහත්තයා?
வென மொனவத ஒனே மஹத்தயா?
வியாபாரி: வேறு என்ன வேண்டும் ஐயா?

ආනන්ද: මේ ඇති. මගේ ගාණ කීයද?
மே எதி. மகே காண கீயத?
ஆனந்தன்: இது போதும். என்னுடைய கணக்கு எவ்வளவு?

වෙළෙන්දා: රුපියල් තුන්සිය පනහයි මහත්තයා.
ருபியல் துன்சிய பனஹய் மஹத்தயா.
வியாபாரி: முந்நூற்றி ஐம்பது ரூபாய் ஐயா.

ආනන්ද: මෙන්න සල්ලි.
மென்ன சல்லி.
ஆனந்தன்: இந்தாருங்கள் காசு.




நடைபெற்று முடிந்துள்ள சில கருமங்களை, தகவல்களாகத் (Information) தெரிவிப்பதற்கும் நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களைக் (Present Perfect Tense) கையாள்வதுண்டு. அத்தகைய சில வாக்கியங்களை இங்கே பயில்வோம்.

(அ) நான் அந்தச் செய்தியை ஏற்கனவே கேள்விப்பட்டுள்ளேன்.
I have already heard that news.

(ஆ) நான் தற்போதுதான் அந்தச் செய்தியை கேள்விப்பட்டுள்ளேன்.
I have just heard that news.

* I have heard. (Compound Verb)
நான் கேள்விப்பட்டுள்ளேன். (கூட்டு வினைச்சொல்)

(இ) நீ எனது பெயரை மறந்துவிட்டாய்.
You have forgotten my name.

* You have forgotton. (Compound Verb)
நீ மறந்துவிட்டாய். (கூட்டு வினைச்சொல்)

(ஈ) நாங்கள் எங்கள் வேலைகளை ஏற்கனவே பூர்த்திசெய்துவிட்டோம்.
We have already completed our work.

(உ) நாங்கள் தற்போதுதான் எங்கள் வேலையை பூர்த்திசெய்துள்ளோம்.
We have just completed our work.

* We have completed. (Compound Verb)
நாங்கள் பூர்த்திசெய்துவிட்டோம். (கூட்டு வினைச்சொல்)

(ஊ) அவர்கள் கொழும்புக்கு ஏற்கனவே திரும்பி வந்துவிட்டனர்.
They have already come back to Colombo.

(எ) அவர்கள் தற்போதுதான் கொழும்புக்குத் திரும்பி வந்துள்ளார்கள்.
They have just come back to Colombo.

* They have come. (Compound Verb)
அவர்கள் வந்துவிட்டனர். (கூட்டு வினைச்சொல்)

(ஏ) நான் புதிய பேனா ஒன்றைக் கண்டெடுத்துள்ளேன்.
I have found a new pen.

* I have found. (Compound Verb)
நான் கண்டெடுத்துள்ளேன். (கூட்டு வினைச்சொல்)

(ஐ) நீ ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்துள்ளாய்.
You have applied for a job.

* You have applied. (Compound Verb)
நீ விண்ணப்பித்துள்ளாய். (கூட்டு வினைச்சொல்)

(ஒ) நீ ஏற்கனவே ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்துவிட்டாய்.
You have already applied for a job.

(ஓ) நீ தற்போதுதான் ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்துள்ளாய்.
You have just applied for a job.

(ஔ) நாங்கள் நல்ல கருமம் ஒன்றைச் செய்துள்ளோம்.
We have done a good job.

* We have done. (Compound Verb)
நாங்கள் செய்துள்ளோம். (கூட்டு வினைச்சொல்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து கடற்கரைக்கு வருகைதந்த
# பென்குவின் விருந்தாளி



பென்குவின் பறக்க முடியாத ஒரு பறவை இனமாகும். இவற்றுக்குப் பறக்க முடியாவிட்டாலும் செட்டைகளைப் பயன்படுத்தி வேகமாக நீந்திச் செல்ல முடியும். பென்குவின் பறவைகளில் பல வகைகள் உள்ளன. இவற்றுள் சிறப்பான வகையாக 'எம்பரர்' பென்குவினைக் குறிப்பிட முடியும். இந்தவகை பென்குவின் பறவைகள் அந்தாட்டிக்கா கண்டத்தில் மட்டுமே வசிக்கின்றன. இவை ஏனைய பென்குவின்களைவிட அளவில் பெரியவை. அவற்றின் உருவம் பார்ப்போருக்கு திமிர்பிடித்தவை போன்று காணப்படுவதால் 'எம்பரர் பென்குவின்' என்று இதனை அழைக்கின்றனர்.

அண்மையில் நியூஸிலாந்தின் வெலிங்டன் நகர 'பெகா பெகா' கடற்கரையில் ஓர் எம்பரர் பென்குவின் பறவை அழையா விருந்தாளியாக வந்தது. இதற்கு முன்பு





இவ்வாறான அந்தாட்டிக்கா எம்பரர் பென்குவின் பறவை நியூஸிலாந்துக்கு வருகை தந்ததே கிடையாது. சுமார் 44 ஆண்டுகளுக்குப் பின்பே, இவ்வாறான எம்பரர் பென்குவின் பறவை வந்துள்ளதாக நியூஸிலாந்து அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது கடலில் தத்தளித்து பாதை தவறியே நியூஸிலாந்தின் 'பெகா பெகா' கடற்கரைக்கு வந்துள்ளது. இந்த பென்குவினைப் பார்ப்பதற்கு பெருந்திரளானோர் வந்திருந்தனர். ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி; வெலிங்டன் விலங்குகள் பூங்கா அதிகாரிகளும் இப்பென்குவினைப் பார்க்க வந்திருந்தனர். இந்த பென்குவினுக்கு உடல்நிலை சரியில்லை என்பதனையும் அவர்கள் புரிந்துகொண்டனர்.

விலங்கியல் மருத்துவர்கள் குழுவொன்று பென்குவினுக்கு எக்ஸ்ட்ரே பரிசோதனைகளை மேற்கொண்டது. அதன் தொண்டைப்பகுதியிலும், வயிற்றிலும் மணலும், கடல்நீரும் நிரம்பியிருந்ததால். அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த சத்திரசிகிச்சை ஒன்றினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும், நியூஸிலாந்தில் இந்த சிகிச்சையினை அளிப்பது சற்றுக் கடினம் என்பதால் இந்த எம்பரர் பென்குவினை அமெரிக்காவின் சண்டியாகோ விலங்கியல் பூங்காவுக்கு அனுப்பி வைத்தனர். அங்குதான் இதற்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அது சுகமடைந்தது. இப்பொழுது அந்த பென்குவின் பறவை ஆரோக்கியமாக இருப்பதுடன், இன்னும் சில தினங்களில் அது அந்தாட்டிக்காவிற்கு கொண்டு சென்று விடப்படவும் உள்ளது.

விலங்கியல் சிறப்பு நிபுணர்களின் கருத்தின்படி, பென்குவின் பறவைகளில் 15 வகைகள் உள்ளன. இவற்றை அவர்கள் 6 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இவை அனைத்தும் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்தவை. வேல்ஸ் மொழியில் இரண்டு பொருளைத் தரும் விதத்தில் பென்குவின் பெயரிடப்பட்டுள்ளது. 'வெண்ணிறச் சிரசு உள்ள' என்பதே இதன் பொருளாகும். முன்னர் ஆர்ட்டிக் கண்டத்தில்





வாழ்ந்து வந்த 'இராட்சத ஒக்' என்ற சிறிய செட்டைகளைக் கொண்ட வெந்நிறக் கடற்பறவைக்கே இப்பெயரிடப்பட்டிருந்தது. ஆனால், இன்று அவை முற்றாக அழிந்துவிட்டன. இவை பென்குவின் பறவைகள் போன்ற தோற்றத்தினைக் கொண்டிருந்தன. ஆனால், இவற்றால் பறக்க முடியும். இது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பறவை இனமாகும்.

பென்குவின்கள் உலகின் தென்பகுதியில் அதிகளவில் வாழ்ந்து வருகின்றன. அந்தாட்டிக்காவின் பனியினால் மூடப்பட்ட பகுதிகளில் இருந்து ஹோர்ன் முனை, வாழ்த்துக்கள் கூறும் முனை மற்றும் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்துவரையும் இவற்றைக் காணமுடியும்.

இவை அந்தாட்டிக்காவின் சின்னமாகவே கருதப்படுகின்றன. அந்தாட்டிக்காவில் இரண்டு வகையான பென்குவின் இனங்கள் மட்டுமே வாழ்கின்றன. எம்பரர் பென்குவின் மற்றும் அடோலி பென்குவின் என்பவையே அவையாகும். ஆனால், வட துருவத்தில் பென்குவின்கள் வாழ்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


விஜய் உடன் 'TOP NEWS' வழங்கும் 2 8GB பென் ட்றைவ் பரிசுகள்!!!




கேள்வி:- பெண்களுக்காக பெண்களே துவங்கிய முதல் பத்திரிகை எது?

இக்கேள்விக்கான விடையினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் Dialog தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து கூப்பன்களையும் இணைத்து கேள்விக்கான விடையையும் குறிப்பிட்டு தபாலிடவும்.

'விஜய்' பத்திரிகையில் வழங்கப்பட்டுள்ள கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் 2 நபர்களுக்கு 8GB பென் ட்றைவ் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

ஜனவரி மாதம் கேட்கப்பட்ட கேள்விக்கான விடை: 2015
'பென் ட்றைவ்' பரிசு பெறும் இருவர்

★ ஐ.எம்.ரினாஸ், பள்ளி வீதி, மாவடிச்சேனை - 05

★ சி.பவிதா, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

முகவரி:
Pen drive போட்டி,
'விஜய்'
த.பெ.இல.2037
கொழும்பு.

அனுப்பும் முறை:





கூப்பன் - பெப்ரவரி
(இந்த மாதத்திற்கான அனைத்து கூப்பன்களையும் சேகரித்து ஒன்றாக அனுப்பவும்)

இல - 04

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கூட்டுக 2



## ஒத்தகருத்துடைய சொல்லின் கீழ்க் கோடிடுக 5

1. சூரியன் - மதி/அனலி/செவ்வாய்
2. நீர் - புனல்/குளம்/நீருற்று
3. குழந்தை - மகன்/சேய்/மனிதன்
4. எழில் - வனப்பு/வனம்/கோதை
5. இருக்கை - ஊஞ்சல்/எரு/ஆசனம்
6. உதாசீனம் - அலட்சியம்/தேடல்/உதவி

## A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் பிரதான படத்தின் எந்தெந்தப் பகுதிகளை ஒத்திருக்கின்றன என்பதை இணைத்துக் காட்டுக 3







தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.03.06 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 406
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து சரியான வசனத்தை அமைக்க 4

1. பள்ளிக்கூடம்/ சென்றான்/அவன்/ காலையில்
2. செல்லவில்லை/ கடல்/மீனவர்கள்/ காரணமாக/ மீன்பிடிக்கச்/ கொந்தளிப்புக்
3. நிகழ்வுகள்/ நடைபெற்றன/ காலிமுகத்திடலில்/ சுதந்திரதின
4. கமலன்/ முதலிடத்தைப்/ ஓட்டப்போட்டியில்/ பெற்றான்/400 மீற்றர்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 22




### மேலிருந்து கீழ்

01. அரேபிய குடாநாட்டின் வட கிழக்கு நாடுகளில் ஒன்று.
02. தீவிரமாக ஈடுபடல்.
03. வீட்டு மிருகம்.
04. மாலை என்பதன் எதிர்ப்பதம்.
07. அரசன் என்பதன் எதிர்பாற்சொல்.
08. பிஞ்சு.
09. கேள்விக்கு கிடைப்பது. (தலைகீழ்)
12. இல்லை என்பதன் எதிர்ப்பதம். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. அகத்தியரை இப்படியும் அழைப்பர்.
04. வனம்.
05. வாசனை மிக்க மலரொன்று.
06. விடுதலைக் கவிதை பாடியவர்.
10. அறுவை உபகரணம். (மாறியுள்ளது)
11. காணாமல் போனதைக் கண்டுபிடிக்க இது செய் என்பர். (மாறியுள்ளது)
12. பெரியோரிடம் நாம் பெறுவது.

## அடுத்து வரவேண்டியது எது? 1



### குறுக்கெழுத்துப் போட்டி இல.21 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | ரி | 2 கை | | 3 கு | 4 பா |
| 5 வ | 6 சி | ப் | 7 பி | ட | ம் |
| ல | | 8 பீ | ர | ம் | பு |
| ன் | | டி | 9 த | | |
| | ணி | | 10 ம | ந் | 11 தி |
| 12 அ | 13 ம | ர | ர் | | ரி |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 403 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பி.லதுஷன், போகாரவத்த, பண்ணலவெல.

**போட்டி: 02**
வர்ஷிக்கா மிலேனியா, தோணிக்கல், வவுனியா.

**போட்டி: 03**
எம்.சஹாம், சுந்தஹேன,நாம்புளுவ.

**போட்டி: 04**
எஃப்.ஹுஸ்னா, நமடகஹவத்த, கலேவளை.

**போட்டி: 05**
ப.மைத்ரேயி, தம்பலவத்தை,மண்டூர்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஃப்.சிமானா, பாதினாவல.
- பி.பாரத்கண்ணா, ஹட்டன்.
- எம்.அதீஃப், பதுளை.
- சி.லக்ஷ்மன், தெஹிவளை.
- ச.ஸதுர்நிதன், மட்டக்களப்பு.
- எஃப்.நஸ்ரின், ஹாலிமலுவ.
- ஸைஹான் ஆஸப், ஒகொடபொல.
- ச.ஹரிஸ்னா, மட்டக்களப்பு.
- எஃப்.அஸ்ரியா, பொத்துவில்.
- என்.டிலக்ஸன்,யாழ்ப்பாணம்.

## அறிவுக்கு விருந்து - 403 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 04**

(A)
1. கற்சிலை
2. சின்னஞ்சிறிய
3. வயல்வெளி
4. மாம்பழம்

(B)
1. ஒஸ்ட்ரியா - வியன்னா
2. பஹ்ரேன் - அல் மனாமா
3. சிலி - சன்டியாகோ
4. ஹங்கேரி - புடாபெஸ்ட்
5. ஜப்பான் - டோக்கியோ

**போட்டி: 05**

1. பாக்கியவான் - பாக்கியவதி
2. தோழன் - தோழி
3. இடைச்சி - இடையன்
4. மணவாளன் - மணவாட்டி
5. ஒருவன் - ஒருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி, தர்மராஜ கல்லூரியின் சாரணிய நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்க வந்திருந்த பிரதம அதிதியான மத்திய மாகாண ஆளுனர் டிக்கிரி கொப்பேகடுவ அவர்களையும் சாரணத் தலைவர்கள் மற்றும் பல சிறப்பு அதிதிகளையும் படத்தில் காணலாம்.




சாரணியர்கள் குழாம்.

# இலங்கை சாரணர் அமைப்பின் நூற்றாண்டு பூர்த்தி விழா




இலங்கையில் சாரணர் அமைப்பு உருவாக்கப்பட்டு, நூறு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு 'ரிஸ்கோ 2013 சர்வதேச சாரணர் ஒன்றுகூடல்' கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை கண்டி, தர்மராஜா கல்லூரியின் 'லேக்வியூ பார்க்' சர்வதேச மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 150 நாடுகளைச் சேர்ந்த சாரணர்கள் வருகை தந்திருந்ததுடன், இலங்கை சாரணர், சாரணியர் உட்பட 4000 த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு இந்நூற்றாண்டு விழாவினை மிகவும் சிறந்த முறையில் சிறப்பித்துள்ளனர்.

1907 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பிரவுன் சீ தீவில் பிறப்பெடுத்த சாரணர் இயக்கமானது, அதன் நிறுவுனர் பேடன் பவல் அவர்களினால் இலங்கையில் கண்டி தர்மராஜா கல்லூரியில் 1913 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதுவே இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது சாரணர் அமைப்பாகும். அத்துடன், இலங்கையின் முதலாவது சாரணர் அமைப்பு உதயமாகிய பாடசாலை என்ற பெருமை கண்டி தர்மராஜா கல்லூரிக்கே உரியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தயாரிப்பு: சாரணர்
**ஜெரம் டி சில்வா**



ரிஸ்கோ அடையாளச் சின்னமான செல்லப்பிராணி.





ரிஸ்கோ சர்வதேச சாரண பாசறைக்கு வருகை தந்திருந்த சர்வதேச சாரணர்கள்.





விழாவிற்கு வருகை தந்திருந்த குருளைச் சாரணர்கள்.





சாரணர் முகாமிற்கு 4000 த்திற்கும் மேற்பட்ட சாரணர்கள் வருகை தந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாயின் கருவறையில்....

# விலங்குகள் அனைத்துமே ஒரே விதம்தான்!



யானை கருவறையில் 12 மாதங்களின் பின்னர் இவ்வாறே தோற்றமளிக்கும் 22 ஆவது மாதத்திலேயே இது பிரசவமாகும்.



இது கருவறையில் உள்ள நாய் குட்டியாகும். இது கருக்கட்டி ஒன்பது மாதங்களேயாகும்.



இந்த டொல்ஃபின் குட்டி சிரிப்பது வெளியே வர ஆயத்தமாகிவிட்டேன் என்று கூறுவதைப் போல உள்ளதல்லவா?

இங்கு நீங்கள் படங்களில் காண்பது சாதாரண கெமராவில் எடுக்கப்பட்ட படங்கள் அல்ல; அதிநவீன 4D தொழில்நுட்பத்தில் எடுக்கப்பட்ட படங்கள் ஆகும். எந்தவொரு மிருகமும் தாயின் கருப்பையில் இருக்கும் போது அவற்றின் வடிவம் கிட்டத்தட்ட ஒரே வடிவிலேயே காணப்படும் என்பதற்கு இந்த படங்கள் சிறந்த உதாரணமாகும். இதுவும் ஒருவகையில் இயற்கையின் அதிசயம்தான்.

புரட்சிகரமான 4D தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பெறப்பட்ட இந்த படங்களின் மூலம் கருவறையை ஆழமாக, உன்னிப்பாக அவதானிக்கக்கூடிய வாய்ப்பு தற்போது கிட்டியுள்ளது. இவற்றில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வடிவங்களை உடைய மிருகங்கள் காணப்படுகின்றன. அதற்கமைய யானை, நாய், டொல்பின், பெங்குயின் ஆகியன கருவறையில் வளரும் பருவத்துக் காட்சிகளை இங்கு காணலாம்.

'நெஷனல் ஜோக்ரஃபிக்' சஞ்சிகையினால் 'கருப்பையில் வளரும் முக்கிய விலங்குகள்' (Extraordinary Animals in the Womb) எனப்படும் விவரணப் படத் தொகுப்பிற்கென பிடிக்கப்பட்ட படங்களே இவை. இப்புகைப்படங்களைப் பிடிப்பதற்கென 3D ஸ்கேனர் கருவி, கணினி கிரஃபிக் மென்பொருள், சிறிய கெமராக்கள் சிலவும் பயன்படுத்தப்பட்டன. விலங்கானது, கருக்கட்டியது தொடக்கம் பிரசவம் ஆகும் வரையில் அதன் வளர்ச்சிப் படிமுறைகளைப் படமாக்கும் விதமாகவே இச்சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.





தாயின் கருவறையில் உள்ள மற்றுமொரு நாய்க்குட்டி.



பெங்குயின் குட்டி தாயின் கருவறையில் முட்டையினுள் இவ்வாறுதான் இருக்கும். 63 நாட்களின் பின்னர் முட்டையினை தந்தையிடம் ஒப்படைத்துவிட்டு தாயானது, உணவுதேடிச் சென்றுவிடும். அதுவரை தந்தைதான் முட்டையைக் காக்கும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 27, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org